“வாழக் கல்மின்”

# கலை மலர்

அதிபர் திலகம்

## திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி

## சிறப்பிதழ்

அரசினர் ஆசிரியர் கலாசாலை
கோப்பாய்.

மலர் 25    1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI RAMS

*Manufacturers of*

**Quality Shirtings**

**Dress fabricss**

**&**

**Nylex Sarees**

## Sri Rams Textile Processing Co. Ltd.

**KONDAVIL ROAD**

**IRUPALAI**

**KOPAY.**

**Phane: 24087** **Cable: Sri Rams**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

அதிபர் திலகம்

## திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி

## சிறப்பிதழ்

மலர் 25

1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையில் நிறைவு பெறும்

அதிபர்



திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி காதல்

பிள்ளைப் பிராயத்திலே — அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு
பள்ளிப் படிப்பினிலே - மதி
பற்றிடவில்லை யெனினும் தனிப்பட்ட
வெள்ளை மலரணை மேல் - அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும் - கண்டேன்
வெள்ளை மனது பறி கொடுத்தேன் அம்மா

ஆடிவருகையிலே - அவள்
அங்கொரு வீதி முனையில் நிற்பாள் கையில்
ஏடு தரித்திருப்பாள் - அதில்
இங்கிதமாகப் பதம்படிப்பாள் அதை
நாடி அருகணைந்தால் - பல
ஞானங்கள் சொல்லி இனியவை செய்வாள் இன்று
கூடி மகிழ்வமென்றால் - விழிக்
கோணத்திலே நகை காட்டிச் செல்வாள் அம்மா

ஆற்றங்கரைதனிலே - தனி
யானதோர் மண்டப மீதினிலே
காற்றை நுகர்ந்திருந்தேன் - அங்கு
கன்னிக்கவிதை கொணர்ந்து தந்தாள் அதை
ஏற்று மனமகிழ்ந்தே - ''அடி
என்னோடிணங்கி மணம் புரிவாய்'' என்று
போற்றிய போதினிலே - இளம்
புன்னகை பூத்து மறைந்துவிட்டாள் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைக் கீதம்

ராகம்:- மோகனம் தாளம்;- ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் அரசினர்
ஆசிரியர் கலாசாலை வாழ்க.

### அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க.
ஆசிரியர் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம் (யாழ்)

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண் டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம். (யாழ்)

தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழவெங் கலாசாலை வாழ
இயன்றநற் பணிகளைப் புரிவோம் (யாழ்)

அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்க் குழு

**காப்பாளர்:** செல்வி. ச. சின்னப்பு (கலாசாலை முதல்வர்)

**ஆலோசகர்:** விரிவுரையாளர்கள்:

முல்லைமணி. வே. சுப்பிரமணியம்
திரு. வை. கா. சிவப்பிரகாசம்
திரு. சீ. அந்தோனிமுத்து
திருமதி. பா. சண்முகராசா
திரு. ஷண்முக குமரேசன்
திருமதி. ம. திருச்சிற்றம்பலம்

**இதழாசிரியர்கள்:** திரு. பாலகிருஷ்ணன்
திரு. வே. பாலேந்திரா

**உறுப்பினர்கள்:** திருமதி. சி. ஆறுமுகம்
செல்வி. பி. கலாராணி
செல்வி. சே. வசந்தி
செல்வி. எஸ். பிரபாவதி
செல்வி. ஆர். ஆனந்தசௌந்தரி
செல்வி. பி. அருள்ஜோதி
செல்வி. பா. கனகரத்தினம்
திருமதி. ப. பூவேந்திரன்
திருமதி. எம். தர்மலிங்கம்
திரு. எஸ். கங்காதரன்
திரு. எம். ஏ. நிசாப்
திரு. கே. பூலோகசிங்கம்
திரு. பெ. அருள்மொழிச்செல்வன்
திரு. கே. சண்முகலிங்கம்
திரு. ஞா. திருக்கேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலை அதிபர்

## செல்வி. ச. சின்னப்பு M. Sc அவர்களின்

# ஆசியுரை

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை வெளியீடாகிய 'கலைமலரின்' இருபத்தைந்தாவது இதழ் கடந்த ஆண்டே வெளிவந்திருக்கவேண்டும். தவிர்க்க முடியாத காரணங்கள் இவ்வெளியீட்டிற்குத் தடையாக இருந்தன. இப்பொழுது மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவருகின்றது. இம்மலருக்கு இரண்டு சிறப்புக்கள் உண்டு. ஒன்று, இது வெள்ளி ஆண்டு மலர்; மற்றது, ஓய்வுபெற்ற எம் அதிபர் திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி சிறப்புமலர் பல பேரறிஞர்களினதும், பேராசிரியர்களினதும், ஆசிரியப் பயிலுனர் களினதும் கட்டுரைகளையும், கவிதைகளையும், வண்ணஓவியங்களையும், ஒளிப் படங்களையும் கொண்டு அதிக பக்கங்களுடன் கனமான, தரமான மலராக வெளியிடவேண்டும் என்பதே எம்மனைவரதும் ஆசை. ஆனால், தற் போதைய சூழ்நிலையிலேற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இம்மலர் சிறியதாகவே வெளிவருகின்றது. சிறிதாக இருந்தாலும் மலருக்குரிய அம் சங்கள் அனைத்தும் பொதிந்திருப்பது பாராட்டக்கூடியதே.

கடந்த சில ஆண்டுகளாக எமது கலாசாலையில் இல்லாதிருந்த சங்கீதம், நடனம், சித்திரம், ஆகிய பயிற்சி நெறிகள் மீண்டும் இவ்வாண்டு தொடங்கப் பெற்றுள்ளன. ஏற்கனவே இங்கிருந்த ஆரம்பக்கல்வி, சமூகக் கல்வி, மனையியல், தமிழ், சமயம் ஆகிய பயிற்சி நெறிகளுடன் இப் பொழுது எட்டுப்பயிற்சி நெறிகள் எமது கலாசாலையில் உண்டு. பல்திறன் களும் பெற்ற பூரண ஆசிரியர்களை உருவாக்குவதே எமது நோக்கம். ஆசிரியப் பயிலுநர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்வதில் எமது விரிவுரையாளர்கள் முழுமனதுடன் உழைக்கிறார் கள். கலாசாலைப் பணிகளின் கண்ணாடியாக மிளிரும் இக்கலைமலருக்கு ஆசி யுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ச. சின்னப்பு
அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



## செல்வி ச. சின்னப்பு அவர்கள்

புன்னகை தவழ்மு கமும்
புண்படா துரைக்கும் நாவும்
பண்ணுசீர் நிர்வாகத்தில்
மாட்சியும் திறமைதானும்
கண்ணியம் உடைய நெஞ்சும்
கடமையில் கண்ணு மான
அன்னைநேர் அதிபர் சின்னப்(பு)
அம்மா நீ வாழ்க வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியகலாசாலை விரிவுரையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைப் பணியில்....

அதிபர்

1. செல்வி. ச. சின்னப்பு M. Sc

துணை அதிபர்

2. திருமதி. சு. செல்லத்துரை B. A Dip. Ed
3. வை. கா. சிவப்பிரகாசம் M. A (Tamil) M. A (Ed.) Dip. Ed.
4. திருமதி. ம. திருச்சிற்றம்பலம் B. A. Dip. Ed. Dip in Hindu Civilization
5. திரு. இ. துரைராசா B. Sc. Cey. Dip. Ed, M. A (Ed.) Jaffna
6. திரு. வே. சுப்பிரமணியம் B. A. Spl. Eng. Traind
7. திரு. சி. அந்தோனிமுத்து B. A (Hons.) Dip. Ed.
8. திரு. க. குககுமாரராசா B. Ed. (S. L) Spl. Trd. (Agric.)
9. திருமதி. சி. இராமநாதன் B. Sc. (H. Sc) Dip. in H. Sc. (France)
10. திருமதி. ச. செல்வராஜன் B, Sc. (H. Sc) Dip. Ed. Spl. Trained (H. Sc)
11. திரு. பொன். தெய்வேந்திரன் Dip. in Music, Saiva Pulavar. Spl. Trained (Eng.)
12. திரு. க. வீரசிங்கம் Adv. Drawing & Painting (Cey.) Higher Grade design & Painting. (Madras)
13 திரு. பொ. சின்னத்துரை Eng. Spl. Voc. Trained Dip. in Paintings and Sculpture
14. திருமதி. பா. சண்முகராசா B. A Dip. Ed.
15. திருமதி. பு. இராமகிருஷ்ணு B. Ed. (Cey.)
16. திரு. ஆர். கணபதிப்பிள்ளை B. A Cey. Dip. Ed. Dip. T. E. S. L
17. செல்வி. வி. வேலுப்பிள்ளை B. Sc (H. Sc) Spl. Trnd. (H. Sc.)
18. திருமதி. டெ. தர்மராசா Tr. Cert. in Phys. Ed.
16. பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் Dip. in Music, Dip. in Dance
20. திருமதி. க. மயில்வாகனம் Dip. in Dance Spl. Trnd. (Dance)
21. திரு. ஷண்முக. குமரேசன் B. A Dip. in Hindu Civilization
22. திருமதி. தி. கணேஸ் A. L (Lond) Spl. Trnd. (Fine Arts)
23. திருமதி. கே. பொன்னம்பலம் M. A Dip. Ed.
24. திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் B. A Dip. Ed. Dip. Drama T.C.C Bala Pandib T. T.
25. திருமதி. ரி. அரிராசசிங்கம் B. A. (Lond) Dip. Ed.
26. திரு. யோ. பெனடிக்ட் B. A. (Hons) Dip. Ed.
27. திருமதி. சி. பரமநாதன் B. Sc. Dip. Ed.
28. திரு. என். இரத்தினம் Tr. Cert in Phy. Ed. Spl. Trained. P. T.
29. திருமதி. பொ. பத்மநாதன் (Sangeethapoosham)
30. வண. ஜே. என். ஜெயச்சந்திரன்
31. வண. ஆர். ஜே. நேசநாயகம்
32. ஏ. ஆர், எம். நிசாப் மௌலவி (ஆலிம்)

கட்புல செவிப்புல உதவியாளர்

33. திரு. வி. கு. இராமலிங்கம் Cert. Technical Ed.

அலுவலக உத்தியோகத்தர்

34. திரு. கே. மாணிக்கசிங்கம் (நிதி உதவியாளர்)
35. திருமதி. ம. செல்வராசா (எழுது வினைஞர்)

விடுதி மேற்பார்வையாளர்

36. திருமதி. ச. தம்பித்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# ஆசியுரை

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையின் வெளியீடான கலைமலரின் இருபத்தைந்தாவது இதழ் வெளி வருவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இம் மலர் கலாசாலை அதிபராகப் பல ஆண்டுகள் அரும் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி இ. ஆனந்தக் குமாரசாமி சிறப்பிதழாக மலர்வது மிகவும் பொருத்தமானதே.

பல்திறன் மிக்க நல்லாசிரியர்களை உருவாக்கும் பணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னணியில் நிற்கின்றது. இக்கலா சாலையில் பயிலும் ஆசிரியர்கள் எமது நாட்டின் எதிர்காலச் சிற்பி களை உருவாக்குவதற்கு அயராது உழைப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

கலாசாலைப் பணிகளின் கண்ணாடியாகத் திகழும் கலைமலருக்கு எனது நல்லாசிகள்.

ம. சிமியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் பேனமுனையிலிருந்து

எட்டுத் திக்கும் புகழ் பரப்பி தனக்கே உரித்தான மிடுக்குடன் தலைநிமிர்ந்து நிற்கும் எமது கலாசாலையின் ''வெள்ளி விழா'' கலைமலராகவும், முன்னைநாள் அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களின் பிரிவுபசார மலராகவும், வெளிவரும் இக்கலை மலர் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கண்டும் உங்கள் கரங்களில் தவழவிடுவதனையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று எமது நாடு சீர்குலைந்துள்ளது. இந்த நிலையிலும் இப்படியான ஒரு வெளியீடு அவசியமா? எனக் கேட்டனர் எமது சகோதரர்கள். அவர்கள் கேட்டது நியாயமே. ஆனால் கலாசாலைப் பாரம் பரியத்தைப் பேணவும் முன்னை நாள் அதிபரின் பிரிவுபசார மலராகவும் வெளியிடவேண்டுமென்ற அவாவில் மலர்ந்ததே இம்மலர்.

இம் மலரில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் அவர்களினதும், அதிபர் அவர்களினதும் ஆசிச் செய்திகளும் விரிவுரையாளர் பெருந்தகைகளினதும் ஆசிரியப் பயிலுனர்களினதும் ஆக்கணங்களும் ஆங்காங்கே மணங்கமிழ்ந்து மலரை நிறைவு செய்கின்றன,

எமது கலாசாலை நிகழ்ச்சிகள் சில நாட்டின் நிலைமை காரணமாக முழுமை பெறாத காரணத்தால் இம்மலரில் இடம் பெறவில்லை. எனினும் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளின் முடிவுகளும் மன்றங்களின் சாதனைகளும் இடம் பெறுகின்றன பயிற்சிநிறைவு பெறும் ஆசிரியப் பயிலுநர் முகவரிகள் என்றும் எமக்கு நினைவூட்டி நிற்கும்.

மலர் வெளிவர பெருமுயற்சி எடுத்த எமது ஆலோசகர் மூல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களுக்கும், ஆசிகள் தந்த சான்றோருக்கும், விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், விளம்பரம் சேகரித்து உதவிய விளம்பரக் குழுவினருக்கும், படங்கள் எடுத்துதவிய ''ஞானம்ஸ்'' நிலையத்தினருக்கும், அழகுற அச்சேற்றிய ''ஆசீர்வாதம்'' அச்சகத்தினருக்கும் கலை மலர்க் குழுவினருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

— நன்றி —

**வே. பாலேந்திரன்**
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்கின்றோம்

0. திரு. யோ. பெனடிக்ட் அவர்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்து எமது கலாசாலைக்கு மாற்றம் பெற்று வந்துள்ளார்.

1. கல்வியமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் கடமைபுரிந்த திருமதி எஸ். பரமநாதன் எமது கலாசாலை விரிவுரையாளராக பணியேற்றுள்ளார்

2. பலாலி ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி பு. இராமகிருஷ்ணு எமது கலாசாலை விரிவுரையாளராகப் பணியேற்றுள்ளார்.

2. அளுத்கம ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி வ. இராமலிங்கம் எமது கலாசாலை விரிவுரையாளராக பணியேற்றுள்ளார்.

4. பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி ரி. அரிராசசிங்கம் எமது கலாசாலை விரிவுரையாளராகக் கடமையேற்றுள்ளார்.

5. அட்டாளைச்சேனை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி கே. பொன்னம்பலம் எமது கலாசாலை விரிவுரையாளராகப் பணியேற்றுள்ளார்.

இவர்கள் னைவரையும் நல்வரவு கூறி இன்முகத்துடன்
வரவேற்கின்றோம்

### மங்கல வாழ்த்து

மனையறம் பேண மகிழ்வோடு புகுந்தோர்

செல்வி. க. சங்கரப்பிள்ளை — விரிவுரையாளர்
திருமதி க. மயில்வாகனம்

ஆசிரியப் பயிலுநர்களுள் பதின்மூன்று பேர் இவ்வாண்டு திருமணம் புரிந்து இல்லற வாழ்வில் காலடி எடுத்து வைத்துள்ளனர் இவர்கள் தம் துணையோடு வையத்துள் வாழ்வாங்குவாழ எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

### வாழ்த்துகிறோம்

எமது விரிவுரையாளர் திரு. இ. துரைராசா அவர்கள் M. A. (Ed) பட்டம் பெற்றுள்ளார். அவருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கு விரிவுரையாளர்கள் அளித்த பிரிவுபசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத்திறன் படைத்த அதிபர்

**திரு. இ. சுந்தரலிங்கம்**

*பிரதம கல்வி அதிகாரி (நிர்வாகம்) கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.*

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுக்குமேல் கல்விமேம்பாட்டிற்காக உழைத்து இளைப்பாறும் வேளையில் அவர்தம் சேவையைப் பாராட்டுமுகமாகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவர்களால் வெளியிடப்படுகின்ற" கலைமலர் "எனும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர் கல்விக்கென்று தனது சேவையை முழுமையாக அர்ப்பணித்த பெருமை திருமதி. ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கே சாரும். அரசினால் காலத்துக்குக் காலம் அறிமுகம் செய்யப்படுகின்ற கல்விக்கொள்கையெல்லாம் பாடசாலைகளில் செயல்படுத்தும் பணி ஆசிரியர்களிலேயே முழுமையாகத் தங்கியிருப்பதால் அச் சீரிய பணிசெய்யும் ஆசிரியர்களுக்கு வேண்டிய காலங்களில் வேண்டிய பயிற்சியளிக்கும் பாரியபொறுப்பை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்களை கல்வியாளர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், கடமையுணர்வுள்ளவர்களாகவும், மாணவர்களாகிய எதிர்கால மனித வளத்தை மேம்பாடடையச்செய்யும் கல்விச்சிற்பிகளாகவும், விளங்கவைப்பது ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபரின் ஆளுமையிலும் நிர்வாகத் திறமையிலும் நடுநிலைமை வகிக்கும் பண்பிலும் தங்கியிருக்கின்றது. இச் சிறப்பியல்புகளுக்கெல்லாம் இலக்கணமாயமைந்து, எண்ணிலடங்கா ஆசிரியர்களைத் தன் கைவண்ணத்தில் உருவாக்கிய திருமதி. ஆனந்தக்குமாரசாமி அவர்களை ஈழத்து ஆசிரியர் உலகம் என்றும் மறக்கமாட்டாது. அம்மையாரின் ஆற்றற்றிறனை மதிப்பிடுவதற்கு கல்வியமைச்சு அன்னாருக்கு கல்விப்பணிப்பாளர் தரத்துக்குப் பதவி உயர்வு வழங்கிச் சிறப்பித்த பெருமை ஒன்றே அவர் சிறந்தவோர் கல்விநெறியாளர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. திருமதி. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் இளைப்பாறினாலும் கூட, ஆசிரியர் கல்விக்கு ஊக்கமளித்து தாம் பெற்ற கல்வியை இவ் வையகம் பெற உதவவேண்டுமென வினயமாக வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையில் நிறைவுறும் ஒப்பற்ற அதிபர்

**செல்வி ச. சின்னப்பு M. Sc.**

அதிபர்

தனிமனிதனின் செயற்கரிய செயல்களே நாட்டின் வரலாறுகளாய் அமைவதற்கு அடித்தளமாகின்றன. இவ் விதிக்கமைய ஒருதனி நபரை—ஒப்பற்ற பெண்மணியைப் பற்றிச் சிந்திக்கவும் எழுதவும் எனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தையிட்டுப் பெரு மகிழ்வும் பெருமையும் அடைகிறேன்'

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தன் வரலாற்றில் பல அதிபர்களைக் கண்டுள்ளது. அவர்களுள் கலாசாலையுடன் தன் வாழ்க்கையை இணைத்து. அதன் வளர்ச்சிக்கு ஆணி வேராகவும், ஆக்க சக்தியாகவும் விளங்கியவர் திருமதி ஆனந்தக்குமாரசாமி என்ருல் மிகையாகாது. தன்னலமற்ற ஆசிரிய சேவையைத் தன் வாழ்வின் இலட்சியமாக வும், உயிர்மூச்சாகவும், கொண்டு வாழ்ந்த அம்மா அவர்கள், முப்பத்தாறு நீண்ட ஆண்டுகள் அரும்பணியாற்றி, இவ்வாண்டு தைத்திங்கள் பதின்மூன்ரும் நாள் இளைப் பாறியுள்ளார்.

அவரின் மகத்தான சேவையைப்பற்றி அவருடன் பணிபுரிந்த விரிவுரையாளர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள். நன்கு அறிந் திருப்பர். எனினும், அவரின் அரிய செயல் களையும் சாதனைகளையும், சற்று நிதானித் துச் சிந்திப்போமாஞல் எம் கடமைகளைச் செவ்வனே செய்யக்கூடிய புத்துணர்வையும் உற்சாகத்தையும் பெறுவோம்.

எல்லோராலும் அன்புடன் 'அம்மா' என்று அழைக்கப்படும் அதிபர் தன் தொழிலைத் தெய்வீகத் தன்மை பொருந்திய ஒரு சேவையாகவே கருத்திற்கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டு நெறி நின்று பணி புரிந்தவர். வருமானத்திற்காகவும், வாழ்க்கையை வளம் படுத்துவதற்காகவும் செய் யப்படுவது தொழில் என்ற பொது அபிப் பிராயத்திற்கு மாருக, இதனை இப்படித் தான் செய்யவேண்டுமென்ற இலட்சியத் துடன் செயற்பட்டவர் திருமதி ஆனந்தக் குமாரசாமி அவர்கள்.

அரச உடைமைகளைப் பேணிப் பாதுகாப் பதில் மிகவும் அவதானமாகவே இருந்தார். எந்த ஒரு சொந்தத் தேவைக்கும், பொதுச் சொத்தைப் பயன்படுத்திய கதையே இல்லை.

அம்மா அவர்களின் 'சலியாத உழைப்பு' என்ற உரம் கலாசாலையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உறுதுணையாய் அமைந் தது. அவரின் காலத்தில் எழுந்த கட்டி டங்கள் ஒவ்வொன்றும் அவரின் சாதனையை நினைவூட்டும் சின்னங்களாகும், 'சப்தகம்' அம்மா அவர்களின் கடமையை நிறைவு செய்த சின்னமாகும். ஏழு ஸ்வரங்களின் பெயருக்குரிய மண்டபம் இது.

கடமையே தலையாய அறம், செய்வன திருந்தச் செய்தல் செயலாற்றும் மனத் திண்மை அவற்றிற்கு உறுதுணையாம் தெய்வ பக்தி, பக்தி மலரக்கூடிய உளத்தூய்மை, நேர்மை இதன் பயனுய் விளைந்த கலை இர சனை. அம்மா அவர்களின் ஏழு முக்கிய பண்புகளுக்குச் சாட்சியம் பகருகிறது.

திருமதி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் அதிபராய்ப் பதவி ஏற்ற காலத்தில், இக் கலாசாலையில் ஆரம்பக்கல்வி என்ற ஒரு பொதுப் பயிற்சி நெறி மாத்திரம் இருந்தது. சந்தர்ப்பங்கள் கதவைத் தட்டும்வரை காத் திராமல், அவர் தாமே சந்தர்ப்பங்களை ஆக்கிப் பயன்படுத்தியதன் விளைவாக இன்று மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம், சமூகக்கல்வி. இந்து சமயம் தமிழ் என்னும் பல்நெறிப் பிரிவுகளை உள்ளடக்கிய கலா சாலையாக விளங்குகிறது.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியர்
திண்ணியராகப் பெறின்''

என்னும் வள்ளுவன் வாக்கிற்கமைய அதிபரது மன உறுதியே அவருக்குப் பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது நிர்வாகச் சிறப்பு போற்றுதற்குரியது. தன்கீழ் பணிபுரியும் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு வேலை கொடுத்து வெற்றிகாணும் திறன் மிக்கவர். அழகான மாலையைத் தொடுப்பவன் கருத்துடன் மலர்களை இணைப்பது போலவும், இசைக் கலைஞன் பல்வேறு இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இனிய இசையை உருவாக்குதல் போலவும் அவரின் பணி நயத்திற்குரியது நடுக்கடலில் மாலுமி தன் மதிநுட்பத்தால், பயங்கரச் சூறவளியின் மத்தியிலும் சப்பலைக் கண்ணும் கருத்துமாய் கரைசேர்ப்பது போல இலட்சிய நோக்குடன் வேலைகளைப் பங்கிட்டு வழங்கியதாலும் சுதந்திரச் செயற்பாட்டிற்கு ஊக்கமளித்தமையாலும் அவரின் நீண்ட சேவை இடையூறின்றி இனிமையாக நடந்தேறியது.

பழகியவர்களுடனும், பழகுபவர்களுடனும் அன்பைச் சொரிந்து நட்புரிமையுடன் உறவாடும் 'அம்மா' அவர்கள் திறனை எழுத்தில் அடக்கவும் முடியாது. எந்தக் கோணத்தில் நின்று உற்று நோக்கினாலும் புகழ் பாடாதிருக்கவும் முடியாது. அத்தகைய பெருமாட்டி தன் இளைப்பாற்றுக் காலத்திலும் எம் அண்மையிலேயே தன் வதிவிடத்தை அமைத்துக் கொண்டார், அதுவே எமக்கும் பெரும் ஆறுதலையும், உற்ற நேரத்தில் அவரின் உதவியைப் பெறும் வாய்ப்பினையும் அளிக்கக் கூடியதாயும் உள்ளது.

பெரியோர் பாதச் சுவடுதனைப்
பின்னேர் தொடரப் பதித்திடுவார்
அரிய செயல்கள் ஆற்றிடுவார்
அம்மா அதற்கோர் இலக்கணமாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த தலைமகள்

திருமதி பா. சண்முகராசா B. A. Dip. Ed.

விரிவுரையாளர்

*நெஞ்சினில் பூத்த நினைவு மலர்கள் வாடுவதில்லை — அவை*
*கிஞ்சிதமேனும் மணத்தையிழந்து வீழ்வதுமில்லை*

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்று வியந்து நிற்கும் வள்ளுவனும். ''போற்றி தாய்'' என்று சிரம் தாழ்த்தும் பாரதியும் தாய்க்குலத்தின் மாட்சிமையையும் பெண்ணின் பெருமையையும் வாழ்த்துகின்றனர். பெண் தன்னலமற்ற பணியைச் செய்யும்பொழுது தாயாக உயர்ந்து நிற்கின்றாள். அத்தகைய ஒரு தாய் — ஓர் அம்மாவை — என் வாழ்க்கையில் சந்தித்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைவதோடு அவரின் கீழ் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை எண்ணி உள்ளம் பூரிக்கின்றேன்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயின்ற மாணவர்களாலும் வேறு பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட ''அம்மா'' இந்த ஆண்டு தை மாதம் 13-ம் திகதியுடன் தன் அளப்பரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். காலசட்டமெனும் பெரிய சூறாவளியில் சிக்குண்டு சுழலும் மரங்கலங்களான ஆசிரிய சமூகம் காணவிழையும் கலங்கரை விளக்கின் ஒளியான அவர் சேவையை நாம் நினைந்து போற்றுதல் வேண்டும்,

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்தொன்பதாம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முதல் நியமனம் பெற்றுத் தன் பணியை ஆரம்பித்தார். 1950-ம் ஆண்டு கோப்பாய் பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றலாகி வந்தவருக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்புக் கிட்டியது. 1951-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரையும் அமெரிக்காவிலுள்ள (Madison) மடீசன் பல்கலைக் கழகத்தில் பயின்று MSc பட்டம் பெற்றார். 1960-ம் ஆண்டு கோப்பாயில் கடமையாற்றிய அவரைப் பலாலி ஆசிரிய கலாசாலைக்கு மாற்றினர். பின்னர் அவ்விடமிருந்து திரும்ப 1963-ல் தற்காலிக அதிபராகக் கோப்பாயில் நியமனம் பெற்றார். அதிபர் இடம் காலியானபோது. நேர்முகத்தேர்வில் பலமான போட்டியின் மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்டு 16-6-1664இல் நிரந்தர அதிபராக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் கல்வி வளர்ச்சிக்காகவும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணித்தார். கடந்த முப்பத்தாறு நீண்ட ஆண்டுகள் ஆசிரிய உலகத்தின் அணையாத தீபமாகத் தன் சேவையை நிறைவு செய்துள்ளார். அன்னாரின் சேவையை நினைவு கூரும் பொழுது அவர்வரலாறு வண்ணவண்ணப்படங்களாக என் உள்ளத் திரையில் ஓடிமறைகின்றது.

திரு ஆனந்த குமாசாமி அவர்களை மணந்து மணிமணியான இரு புதல்வர்களைப் பெற்றெடுத்த காலத்திலும் பின் தன் ஆருயிர்த் தலைவனையிழந்து வருந்திய நாட்களிலும் அவர் தன் கடமையில் தவறாது கர்மவீரனைப்போல வாழ்ந்தார். இன்று அவரின் குழந்தைகளில் ஒருவர் பொறியியலாளராகவும் அடுத்தவர் வைத்திய கலாநிதியாகவும் உயர்ந்துள்ளபோதும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உயர்ச்சியிலும் புகழிலும் அவர் அடைந்த நிறைவும் பெருமையும் மகிழ்ச்சியும் போல அவர் வேறு எதிலும் கண்டதில்லை. கலாசாலை அவருக்கு அருமைப் பெண் குழந்தையாக உள்ளத்தில் இடம்பெற்றுள்ளதை அவரை நன்கு அறிந்தவர்களைத் தவிர வேறு ஒருவராலும் உணரமுடியாது. பெண் குழந்தையின் உடைமைகளையும் பொருட்களையும் தாயானவள் எப்படிப் பாதுகாத்துக்கொடுப்பாளோ அப்படி ''அம்மா'' அவர்கள் கலாசாலையின் ஒவ்வொரு தளபாடத்தையும் கட்டிடங்களையும் கண்ணும் கருத்துமாகப் பேணினார். மக்களுக்கு கடிதம் எழுதுவதானாலும் தன்னுடைய இல்லத்திற்குச் சென்று எழுதுந்தாள் கொண்டு வந்து எழுதுவதேயன்றிக் கல்லூரியின் தாளையோ உறையையோ பயன்படுத்தாத பண்பை எம்மால் எவ்வாறு பாராட்டமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா—திருமதி ஆனந்தக்குமாரசாமி திறமைமிக்க அதிபர். அவருடைய செயலாற்றலுக்கும் நிர்வாகத் திறனுக்கும் பல ஆதாரங்கள் உண்டு. அவர்காலத்தில் எழுந்த கட்டிடங்கள், அவர் மேற்பார்வையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் அவரின் மதிநுட்பத்தையும், வினைத்திட்பத்தையும் விளக்கும் சான்றுகளாகும். வாத்தியக்குழுவின் தலைவன் எவ்வாறு தன் கை அசைவினால் தாளம் சிறிதும் சிதையாத இனிமையான இசையை உருவாக்க முடியுமோ அதேபோன்று தன் கீழ்ப்பணிபுரியும் ஒவ்வொருவரின் ஆற்றலையும் திறமையையும் நன்கு பயன்படுத்திக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை நாட்டிலே தலைசிறந்த பயிற்சிக்கலாசாலை என்று பலராலும் எடுத்தியம்பச் செய்துள்ளார்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்''

—என்ற குறளின் பொருளுக்கு இலக்கியமாக வாழ்ந்தமையே அவரின் நிர்வாகச் சிறப்பின் இரகசியம் ஆகும்.

அம்மா அவர்கள் எளிய இனியமுறையில் சொற்பொழிவாற்றுவதில் நிகரற்றவர். தாய்மொழியில் இனிமை ததும்பும் அவர் பேச்சு ஆங்கிலத்தில் ஆணித்தரமாக அமையும் சிறப்புடையது. ஒரு சமயம் எல்லா ஆசிரிய கலாசாலை அதிபர்களும் விரிவுரையாளர்களும், கல்வி மா அதிபதிகளும் கூடிய கருத்தரங்கில் நிலையாப்பிரகாரமாக உரையாற்றும்படி அழைக்கப்பட்டார். அப்பொழுது நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமாகப் பாரதியின் புதுமைப் பெண்ணாக எழுந்து சென்று யாவரும் வியப்புறும் வண்ணம் பேசியதை அங்கிருந்த ஒருவராலுமே மறக்க முடியாது.

ஆரம்பப்பயிற்சி என்ற அடித்தளத்தோடு விளங்கிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை இன்று மனையியல், சங்கீதம், சித்திரம், நடனம், சமூகக்கல்வி, தமிழ், இந்துசமயம் என்ற பல்வேறு பாடநெறிகளான அழகு மிக்க கோபுரங்களுடன் கம்பீரமாக உயர்ந்து நிற்பதற்கு ஆதிசக்தியாக விளங்கியவர் அம்மா என்றால் மிகையாகாது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை வண்ணக் கதம்பமாக மணம் வீசி, மகிழ்வூட்டுவதற்கு அம்மா அவர்களின் கலைஞானத்தைத்தான் நாம் மெச்சவேண்டும். கோப்பாயின் கட்டிடங்களுக்கு இடம் பெற்று விளங்கும் ''கல்யாணி'' ''அமிர்தவர்ஷினி'' ''சித்திராம்பரி'' ஜகன்மோகினி ஆகிய பெயர்களே சங்கீதத்தில் அம்மாவின் ஈடுபாட்டையும் இரசனையையும் புலப்படுத்தும். இசையிலே மயங்கிய இறைவனைப்போல கலைகளில் உள்ளத்தை பறிகொடுத்து நிற்கும் அம்மாவிடம் கேட்ட வரங்கள் யாவும் கிடைக்கும் என்பதை சிலர் அநுபவவாயிலாக உணர்ந்துள்ளனர்.

பாடுபட்டு படைத்தளிக்கும் நிகழ்ச்சிகளையும் செயற்திட்டங்களையும் அம்மா பாராட்டும் இயல்புடையவர். நாடகங்களிலும் நாட்டிய நாடகங்களிலும் பரிசுபெறும் பாத்திரங்களை தனித்தனியாக புகழ்ந்துரைத்து உற்சாகப்படுத்தும் பரந்த மனம் உடையவர். மற்றையவர்களின் துயரங்களில் பங்கு கொள்ளும் இளகிய உள்ளத்தை அவர் முன்னின்று அகதிகளுக்காகச் செய்த உதவிகள் சாட்சிகூறும். எதையும் தயங்காது உவந்தளிக்கும் தியாகசிந்தனையையும் கடமையைக்கருத்தாகச் செய்யும் சீரிய பண்பையும் ஒருங்கே கொண்ட அம்மா சட்டதிட்டங்களை வழுவாமல் கடைப்பிடிப்பதில் மிகவும் அழுத்தமானவர். வளைந்து கொடுக்கும் தன்மையுடையவர்கள் சிறந்த தலைவர்களாக இருக்க முடியாது என்பதைத் தம் நடத்தையின் மூலம் எடுத்துக் காட்டியவர்.

இரதிலக்குமி என்ற பெயருக்கேற்ற மோகன உருவமும், எதிரில் நிற்போரைப் பணியவைக்கும் ராஜகளையும் நிலைத்ததைச் செயல்படுத்தும் கம்பீரமும் உடைய அம்மா உள்ளத்தில் பச்சைக்குழந்தை. உள்ளத்தில் இருப்பதை வார்த்தைகளில் கொட்டிவிடும் கபடமற்ற சுபாவம் அவருக்குப் பல நண்பர்களையும் சில பகைவர்களையும் ஈட்டிக் கொடுத்துள்ளது. ஆசிரிய உலகின் அரும்பெரும் தூணாக விளங்கிய அம்மா தன் ஓய்வுக்காலத்தை கல்விப் பணிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதிலும் வழிகாட்டுவதிலும் செலவிடவேண்டும் என்பதை பல உள்ளங்கள் பெரிதும் விரும்புகின்றன.

தெய்வ பக்தியும் இறையருளில் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டு வாழும் அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நாடும் வீடும் சிறக்கத் தன் நற்பணியைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் திலகம் திருமதி ஆனந்தக்குமாரசாமி

**வித்துவான் சி. குமாரசாமி, B. A. M. A. Q.**

**முன்னைநாள் விரிவுரையாளர்**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தனக்கென ஒரு சகாப்தத்தை உருவாக்கிப் பெரும் புகழ்படைத்தவர் திருமதி இ. ஆனந்தக் குமாரசாமி அவர்கள். ஈடிணையற்ற நிர்வாகியாக அவர் விளங்கியமையால் சிறந்த கட்டுப்பாடுடன் கூடிய பயிற்சிக் கலாசாலையாக அது விளங்கியது. அவர்கள் இவ்வாண்டு ஓய்வுபெற்றமை ஆசிரிய உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இரதிதேவி என்னும் பெயர்பூண்ட அவரது தந்தையார் திரு. நாகசுந்தரம் அவர்கள் ஒரு பொறியியலாளர். பர்மாவில் தனது கல்வியைத் தொடர்ந்த செல்வி இரதிதேவி நாகசுந்தரம் இந்தியா சென்று முதுகலை மாணிப் (M. A.) பட்டம் பெற்றார். சில ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணிபுரிந்து விட்டுப் புலமைப்பரிசில் பெற்று அமெரிக்கா சென்று எம். எஸ்ஸி (கல்வி) பட்டம் பெற்றார்.

1963 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வு பெறும்வரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபராகப் பணியாற்றினார். அவர் அதிபராகும்போது இக்கலாசாலை மகளிர் கலாசாலையாக விளங்கியது.

அவரது கணவர் திரு. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் புகழ்பெற்ற நியாய துரந்தரர். சமய தத்துவ ஈடுபாடுமிக்கவர். இல்லறத்தின் பேறாக இரு புத்திரர்களை ஈன்றெடுத்தனர். சில ஆண்டு மணவாழ்வின் பின் மிக இளவயதிலேயே கணவரை இழந்து துயருறும் நிலையேற்பட்டது. இவ்விழப்பினை மன உறுதியுடன் தாங்கிக்கொண்டு கலாசாலைப் பணியிலே முழுமூச்சாக ஈடுபட்டார்.

அதிபர் அவர்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர் ஆயினும் தமிழறிவும், தமிழார்வமும் மிக்கவர். தூய செந்தமிழில் உரையாற்றும் வன்மை பெற்றவர். ஆண்டு தோறும் அவர்கள் நடத்திவந்த முத்தமிழ் விழாவும், தமிழ்த் துறைப் போட்டிகளும் அவர்களது தமிழார்வத்தைப் பறைசாற்றி நின்றன. கலையார்வம் மிக்கவராகவும் அவர் விளங்கினார். பல்வேறு துறைகளிலும் ஆசிரியர்கள் வன்மை படைத்து விளங்க வேண்டும் என்பது அவரது வேணவா. இசையில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தமையால் கலாசாலை மண்டபங்களுக்கு சண்முகப்பிரியா, ஸ்ரீரஞ்சனி, கல்யாணி, ஹம்சத்வனி, அமிர்தவர்ஷினிபோன்றபெயர்களையே சூட்டினார். புதிதாக அமைக்கப்பட்ட ஒன்றுகூடல் மண்டபத்திக்கும் ஏழு சுரங்களையும் நினைவுறுத்த 'ஸப்தகம்' என்றே பெயர் சூட்டினார். சங்கீத, நாட்டிய நாடக, நாடக, சித்திர, கோலப் போட்டிகளை ஒழுங்கு செய்து ஆசிரிய மாணவர்களையும் பல்துறை ஈடுபாடு கொண்டவர்களாக உருவாக்கிய பெருமை திருமதி ஆனந்தக்குமாரசாமிக்கே உரியதாகும். இசை, நடனம், சித்திரம் ஆகிய பாட நெறிகளும் கோப்பாயில் இடம் பெற்றதும் அதிபர் அவர்கள் கொண்ட பெருமகிழ்ச்சியும் ஆர்வமும் கணக்கிடமுடியாததாகும்.

உடற்பயிற்சிக்கும் அதிக முக்கியத்துவத்தை அவர் வழங்கியிருக்கிறார்கள். ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகளில் புதிய புதிய அம்சங்களையும் உத்திகளையும் அத்துறை விரிவுரையாளர்கள் புகுத்துவதற்குப் பாராட்டும் ஊக்கமும் அளிக்க அதிபர் அவர்கள் தவறுவதில்லை. விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் வேறு கல்லூரிகளுடனும் ஆசிரியர் கலாசாலைகளுடனும் போட்டியிட்டு வெற்றிவாகை சூடவைத்த பெருமையும் அவர்களுக்கே உரியதாகும்.

மனையியல் துறையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை தனிப் பெருமை நாட்டியது. காலந்தோறும் நடைபெற்ற மனையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்காட்சிகளைப் பிற பாடசாலைகளி லிருந்து வந்த ஆயிரக்கணக்கான மாணவர் களும் ஆசிரியர்களும் பார்வையிட்டுப் பயன் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'கிருஷ்ணையின் ஆணை' என்னும் நாடகத்தைக் கொழும்பில் அரங்கேற்றி அதனால் பெற்ற பணத்துடன் அரசாங்க நிதியுதவியும் பெற்று கல்லூரியில் நிறுவிய கிருஷ்ணைப் படிப்பகம் அதிபர் அவர்களது ஞாபகார்த்த மண்டபமாக மிளிர்ந்துகொண்டிருக்கிறது. தாம் வைத்திருந்த விலையுயர்ந்த பல நூல்களை அந்நூலகத்திற்கு அன்பளிப்பாக உதவியதோடு பிறரும் உதவக்காரணராயும் விளங்கினர். நூல் நிலைய வளர்ச்சியிலும் அதை மாணவர்க்குப் பூரண பயன் பாடுள்ளதாக ஆக்குவதிலும் அதிபர் அவர்கள் காட்டிய ஈடுபாடு சொல்லுந்தரமன்று. வாசிப்புப் பூரண மனிதனுக்கும் என்பதற்கு எமது அதிபர் ஓர் எடுத்துக்காட்டு. கிழமைதோறும் யாழ். நூலகம் சென்று காலந்தோறும் வெளிவரும் புதிய நூல்களை இரவலாகப் பெற்றுவந்து ஆர்வத்தோடு வாசிப்பது அவரது வழக்கம்.

கல்லூரியிலும் விடுதியிலும் கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தியமை பற்றிச் சில மாணவர் அதிருப்தி காட்டுவர். ஆயினும் பயிற்சி முடிந்து சென்றபின் அக்கட்டுப்பாடு தம்வாழ்க்கையையே திருத்தியமைத்துவிட்டமையை உணர்ந்து அவர்கள் பாராட்டிக் கடிதங்கள் எழுதுவதைக் காணலாம். நேரக்கட்டுப்பாட்டிலும் லீவு விடயத்திலும் மிக மிகக் கண்டிப்பாக அவர் நடந்துகொள்வார். இவ்விரு விடயங்களிலும் எவரது புறுபுறுப்பையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அதிபரின் நிருவாக வெற்றிக்கு இவை உறுதுணையாக விளங்கின எனலாம். ஓய்வு பெற்ற திருமதி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து சமூகத்திற்குப் பயனுள்ள சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mrs. R. Anandakumarasamy M. A. M. Sc.

## — An Appreciation —

J. G. Arasaratnam B, A. (Lond.) M. A. (Princeton)
Rtd. Principal

I consider it a privilege to have come to know Mrs. Anandakumarasamy. I have known her from the time she was a lecturer at Palaly Teachers' college. She is a person of high principles, and led a life of utter simplicity and humility. She was an efficient teacher and a great principal.

She was a lecturer of good repute and had the ability to present her subject to the students in a lucid and pleasant way. She did her post graduate training in U. S. A. She excelled as a lecturer in Education and Psychology. I am certain that most of her students would have greatly appreciated her lectures.

When she was appointed principal of Kopay Teachers' College, I happened to be head of a similar institution at Nallur. This enabled me to watch closely with interest her work there. She was a good administrater and was fair and just to all those who worked under her. She was concerned not only with the improvement of the institution, but also with the welfare of the students and the staff of the College. She never failed to get additional facilities for the students from the department. She got additional buildings put up for the expansion of the college. She always got the co-operation of the staff and students in all her undertakings.

The College developed in many ways, and became one of the leading Teachers' Colleges in the island.

She won the hearts of all, by her pleasing personality and amiable ways. She can feel happy in her retirement that she has left her foot prints in the sands of time for many to follow. May God grant her many more years of peace, happiness, and usefulness, in her retirement.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கு
ஆசிரியப் பயிலுநர் அளித்த பிரிவுபசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருபத்திரண்டு ஆண்டுகாலம்
அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும்

# திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி M. A. M. Sc.

அவர்களுக்கு விடுதி மாணவர் அளித்த

# பிரிவுபசார இதழ்

இலங்கையதன் சிரமெனவே இலங்கு கின்ற
எழிலோங்கு யாழ்ப்பாணம் தன்னி லோர்பால்
நலங்கள்பல நிறை கோப்பாய் மண்ணில் தோன்றி
நாற்றிசையும் கல்விதரு கழக மாக
இலங்குகின்ற ஆசிரிய கலாசா லையின்
ஏற்றத்திற் காகவென்றும் உழைத்த அன்னை
கலங்காத சித்தமுடன் இருபத்தீ ராண்(டு)
கண்ணினது மணிபோலக் காத்தீர் அம்மா

அன்னையவள் அருமகவை வளர்த்தாற் போல
ஆசிரிய கலாசாலைக் குழந்தை தன்னை
மன்னுபுகழ் சேர்த்திட்டே வளர்த்தீர் தாங்கள்
மாசற்ற சேவைபல செய்தீர் அம்மா
உன்னதமாம் சப்தகத்தைப் படிப்ப கத்தை
ஓங்குபல கட்டிடங்கள் உதிக்கச் செய்து
மன்னுபுகழ் பரவிடவே கலைகள் எல்லாம்
மங்காமல் வாழ்வதற்கு வழிகள் செய்தீர்

அன்னையாய் அருந்துணையாய் விடுதி வாழும்
அனைவர்க்கும் விளங்கியே எதுவந்தாலும்
முன்வந்து அரவணைத்துத் துயரம் போக்கி
முடிந்தமட்டும் உதவிபல செய்தீர் அம்மா
கண்ணையிமை காப்பதுபோல் காத்தீர் தாங்கள்
கவலையெதும் இல்லாது வாழ்ந்து வந்தோம்
இன்னுமிந்தச் சேவைதன்னை யாற்ற வல்லார்
இவ்வுலகில் யாரெமக்கு உள்ளார் அம்மா

தாங்களெமைப் பிரிந்தாலும் இதயம் என்றும்
தங்குமெங்கள் கலாசாலை தனிலே என்றும்
நீங்காத புகழுடனே செல்வம் பெற்று
நிகரில்லா இறைவனது கிருபை யாலே
பாங்குடனே பல்லாண்டு வாழ்வதற்கு
பணிகின்றோம் இறைவனையே நாளும் நாங்கள்
ஓங்குபணி பலபுரிந்து உலகம் போற்ற
ஒப்பில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்க.

—விடுதி மாணவர்கள்
(ஆக்கம்: 'முல்லைமணி')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணக்கோள்கள் - சிறு விளக்கம்

வை. கா. சிவப்பிரகாசம், எம. ஏ. (கல்வி); எம், ஏ. (தமிழ்)

**விலங்குகளின் கற்றலும் மக்களின் கற்றலும்**

விலங்குகளுக்கும் மக்களுக்கும் பொதுவானது கற்றல் என்னும் நடத்தை. பெரும்பாலும் விலங்குகள் முயன்றுதவறித் கற்கின்றன; சிறுபான்மை அகக் காட்சிமூலம் முழுநிலை விளக்கம் பெறுகின்றன. எனினும் அவை தாகம் தணித்தல், பசிதீர்த்தல் என்னும் அடிப்படைத் தேவைகள் தொடர்பான எளிய திறன்களையே கற்கின்றன. அவற்றின் கற்றலிற் காட்சிப் பொருள்களே முக்கிய இடம் பெறுகின்றன.

மக்களின் கற்றல் இவற்றின் மேம்பட்டது. முயன்றுதவறிக் கற்றல். அகக்காட்சி மூலம் முழுநோக்கு விளக்கம் பெறல் என்பன மக்களின் கற்றலில் தொடக்க நிலைகளிற் காணப்படலாம் ஆயினும் அவர்கள் காட்சிப் பொருள்களோடு கருத்துப்பொருள்களையும் கற்கிறார்கள். சிக்கலான அரிய திறன்களையும் பெறுகிறார்கள்,

**எண்ணக்கோள்களும் கோட்பாடுகளும்**

மக்கள் கற்கும் கருத்துப் பொருள்களில் எண்ணக்கோள்கள் அல்லது எண்ணக் கருக்கள் [CONCEPTS], கோட்பாடுகள் அல்லது கொள்கைகள் [PRINCIPLES] என்பன முக்கியமானவை, இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை; நுண்ணிய வேறுபாடுள்ளவை. கோட்பாடு என்பது இரண்டு அல்லது அதனின் மேற்பட்ட எண்ணக்கோள்களுக்கு இடையிலுள்ள தொடர்புறவுகள் பற்றிய கூற்று ஆகும். ஆயின் எண்ணக்கோள் என்பது உளவியல் நோக்கில் பொருட் செறிவுடமை, கட்டமைப்பு, புலம்பெயர் பண்புடைமை என்னும் சிறப்பியல்புகளுள்ள மனக்கருத்து அல்லது பிழம்பில் கருத்து ஆகும். இவ்வாறு இவற்றின் வேறுபாட்டைக் குளோஸ்மெயர், ரிப்பின் என்னும் உளவியல் அறிஞர்கள் விளக்குவர்.

**வரையறை**

எண்ணக்கோள் என்றால் என்ன என்பதற்குப் பல வரைவிலக்கணங்கள், விளக்கங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட பொருளை அல்லது பொருளினத்தை ஏனைய பொருள்களோடு அல்லது பொருளினங்களோடு தொடர்பு படுத்தியும் வேறு படுத்தியும் அறிந்து கொள்ளத் துணைபுரியும் பொருட் பண்புகள் பற்றிய ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல்களின் தொகுதியே எண்ணக்கோள் ஆகும். உளவியலாளர் பலர் போற்றும் இவ்வரையறையிலே பொருள் என்பது பண்டங்கள், சம்பவங்கள். செயன் முறைகள் என்னும் மூன்றையும் குறிக்கும். ஒரு சொல்லுக்கு அதன் பொருள் எவ்வாறு முக்கியமோ அவ்வாறே ஓர் எண்ணக்கோளுக்கு அதற்குரிய ஒழுங்கமைப்புள்ள தகவல்கள் முக்கியமாயுள்ளன.

**எண்வகைப் பண்புகள்**

எண்ணக்கோள் ஒன்று (i) கற்றலில் எளிமை (ii) பயன்படு தன்மை (iii) தகுதி [VALIDITY] (iv) பொதுவாதல் (v) ஆற்றல் (vi)கட்டமைப்பு (vii) புலனுணர் உதாரணமுடைமை (viii) உதாரணப் பன்மை என்னும் எட்டுப் பண்புகளைக் கொண்டிருத்தல் சிறப்பாகும்.

**கற்றலில் எளிமை**

ஒத்த பண்பாட்டு அநுபவங்களை அல்லது மொழியைப் பொதுவாகக் கொண்டுள்ளவர்கள் சில எண்ணக் கருக்களை எளிதாகக் கற்பர்; வேறுசிலவற்றை அவ்வாறு கற்பதில்லை. எடுத்துக்காட்டாக 'நாய்' 'மரம்' போன்ற கண்ணாற் காணக்கூடிய உதாரணங்களுள்ள எண்ணக் கோள்களை எளிதாகக் கற்கலாம், ஆயின் அணு, ஊழி, ஈறிவ் காலம் என்னும் எண்ணக்கோள்கள் கண்ணாற் காணற்கரியனவாதலின் அவற்றை அவ்வாறு எளிதாகக் கற்றல் இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன்படுபண்பு :**

சில எண்ணக்கோள்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், கோட்பாடுகளை உருவாக்குவதிலும் அவற்றைப் புரிந்து கொள்வதிலும் பயன்படவல்லன. எடுத்துக்காட்டாக, எண். தொடை என்னும் எண்ணக்கோள்கள் பல் வேறு பிரச்சினைகளைத் தீர்க்கப் பெரிதும் பயன் படுகின்றன. அவ்வாறே அவை அவற்றைப்பாகுபாடு செய்யவும் துணைபுரி கின்றன,

**தகுதி :-**

யாதாயினும் ஓர் எண்ணக் கோளின் வரையறைபற்றி நிபுணர்களிடையே காணப் படும் கருத்திணக்கமே தகுதி எனப்படும். விலங்கியல் தாவரவியல் எண்ணக் கருக்க ளின் வரைவிலக்கணங்களில் நிபுணர்களிடம் கருத்தொற்றுமை பரந்து காணப்படுகின் றது. ஆயின் நடத்தையியலில்—உளவியலில்—இத்தகைய கருத்தொற்றுமை காணப்படு தல் குறைவு. நுண்மதி பற்றிய வரைவிலக் கண வேறுபாடுகளைச் சான்றாகக் கூறலாம்.

**பொதுவாதல் :-**

பொருள்கள், தொகுதிகள் பலவற்றி டையே காணப்படும் பொதுமையே பொது வாதல் எனப்படும். இது துணை, எண்ணக் கோள்கள் அல்லது, உட்பிரிவுகள் என்பவற் றோடு தொடர்புடையது. 'உயிருள்ள பொருள்கள்' என்பது பெரிதும் பொது வானது, ஆயின் முதுகெலும்புள்ளவை, பாலூட்டிகள், மனிதன் என்பன ஒன்றின் ஒன்று பொதுமை குறைந்தன வாயுள்ளன.

**ஆற்றல் :-**

ஏனைய எண்ணக்கோள்களை ஒருவர் அடைய ஓர் எண்ணக்கோள் தேவைப்படும் அளவே ஆற்றல் எனப்படும். புதிய தகவல் களை அறிவதற்கு முன்னர் அதற்காகப் பயன் படுத்தப்படும் அறிமுகத்துணைப் பொருள்களை இவ்வாற்றல் என்னும் பண்பை விளக்கும் உதாரணமாக ஒசுபெல் என்னும் அறிஞர் கூறுவர்.

**கட்டமைப்பு :-**

எண்ணக்கோளை வரையறை செய்யப் பயன்படும் பண்புகள் ஒன்றோடொன்று பூண்டுள்ள தொடர்பே கட்டமைப்பாகும். கணிதத்துறை வடிவங்களிற் காணப்படும் படும் பரிமாங்ணகளையும் அவற்றின் தொடர் புகளையும் இதற்கு உதாரணமாகச் கொள்ள லாம்.

**புலனுணர் உதாரணமுடைமை :-**

கண் முதலிய புலன்களால் அறியத்தக்க உதாரணங்கள் இருத்தலே புலனுணர் உதாரணமுடைமையாம். எடுத்துக்காட் டாக, தாவரம் என்னும் எண்ணக்கோளுக்கு கண்ணுற் காணக்கூடிய, மூக்கால் மோந்து பார்க்கக் கூடிய, கரங்களால் தொட்டறி யக் கூடிய உதாரணங்கள் உள்ளன. ஆயின் ஊழி, ஈறில்காலம் என்பவற்கு கண்ணுற் காணக்கூடிய உதாரணமெதுவுமில்லை.

**உதாரணப் பன்மை:-**

ஒன்றுக்குமேல் எண்ணிலிவரையில் உதா ரணங்கள் பல இருக்கும் சிறப்பே உதார ணம்பன்மையாகும். சந்திரனுக்குஉதாரணம் ஒன்றே உள்ளது. ஆயின் கண்டங்கள் என் பதற்குச் சில உதாரணங்கள் உள்ளன. நீர்த்துளிகள் என்பதற்கு மிகப்பல உதார ணங்கள் உள்ளன. முழுவெண்கள் என்ப தற்கோ எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன.

**எண்ணக்கோள் அடைவின் நிலைகள் :-**

ஒருவர் பெறும் எண்ணக்கோள் அடை விலே பருப்பொருள் நிலை, அடையாளநிலை, பகுப்புநிலை, முறைசார்நிலை என்னும் நான்கு நிலைகள் உள்ளன.

**பருப்பொருள் நிலை :-**

எண்ணக்கோள் அடைவின் இந்நிலையில் (i) ஒரு பொருளின் தனித்தன்மையைக் காட்டும் பண்புகளைக் கவனத்திற்கொள்ளல் (ii) அவற்றை நினைவில் வடிவமாக்கல் என் னும் கூறுகள் அடங்கியுள்ளன. கூர்ந்து நோக்கல், பிரித்தறிதல், நினைவு படுத்தல் என்னும் செயல்கள் இந்நிலையிற் சிறப்புப் பெறுகின்றன.

**அடையாள நிலை :-**

ஏற்கனவவே கண்ட ஒருபொருளைத் தொலைநிலையில் அல்லது மற்றொரு நிலையிற் காணும்போது காணப்பட்ட பொருள் ஒன்றே என்று உணர்வதன்மூலம் இந்நிலையில் எண் ணக்கோள் பெறப்படுகின்றது. ஒரு பொருளை வெவ்வேறு கோணங்களிலிருந்து நோக்கியறிதலை இதற்கு எடுத்துக்காட்டா கக் கூறலாம், பண்பு பிரித்தறிதலும், பொதுமை காணலும் இந்நிலையில் அடை விற்குதவும் செயல்களாயுள்ளன. இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதனின் மேற்பட்ட பொருள்கள் ஓரினத்தைச் சேர்ந்தவை எனப் பொதுமை காண்பதன் முன்னர் ஒரே பொருள் பல வடிவங்கள் பெறினும் அதன் அளவு மாருது என்பதை உணர்தல் முக்கியமானதாம்.

பகுப்பு நிலை :-

தமது கூற்றுக்குரிய அடிப்படையைக் கூற இயலாவிடினும் ஒருவர் இந்நிலையில் ஓரினத்தைச் சேர்ந்த இருவேறு உதாரணப் பொருள்களை ஒத்த இயல்பின என்று கூறுதல் அவர் எண்ணக்கோளைப் பெற்றுள்ளதைக் குறிக்கும்—இங்கே உதாரணமானவை உதாரணமல்லாதவை எனப் பல பொருள்களைப் பகுத்தல் அடைவுக்குரிய செயலாக விளங்குகின்றது.

முறைசார்நிலை :–

ஒருவர் ஓர் எண்ணக்கோளின் பெயரைக் கூறல், அதன் ஏற்கத்தக்க வரைவிலக்கணப் பண்புக்கூறுகளைக் கூறல், அதற்குரிய உதாரணமானவை, உதாரணமல்லாதவைகளைச் செவ்வனே திருத்தமாகக் கூறல், அவ்வாறு பகுக்க அதன் வரைவிலக்கணப் பண்புக்கூறுகளில் எது / எவை அடிப்படையாமென்று கூறல் என்னும் நான்கு செயல்களையும் செப்பமாக ஆற்றிஞல் அவர் முறைசார் நிலையில் எண்ணக்கோளை அடைந்துள்ளார் எனலாம். எடுத்துக் காட்டாக நாய்கள், நரிகள், ஓநாய்கள் என்பவற்றைக்காட்டும் போது ஒருவர் நாய் என்னும் எண்ணக் கருவை இச்செயல்கள் மூலம் தெளிவு படுத்தலைச் சான்ருகக் கூறலாம்.

இந்நிலையில் (i) பண்புகளைப் பிரித்தறிதல் (ii) அவற்றின் பெயர் கூறல் (iii) கருதுகோள் ஒன்றை உருவாக்கலும் சோதித்தலும் (iv) அப்பண்புகளின் அடிப்படையில் அதனை மதிப்பிடுதல் என்னும் செயல்கள் எண்ணக்கோளைக் கற்றலில் இடம்பெறுகின்றன.

எண்ணக்கோளை வரையறுக்கும் பண்புகளை அறியும் ஒருவர் தாம் அடைந்த அறிவைப் பிறர்க்கு உணர்த்தும் திறனைப் பெற்றிருக்கவேண்டும். பொதுவாக வாய்மொழியே இதற்குக் கருவியாம். எனினும் சைகை மொழியும் இதற்கும் பயன்படலாம். எண்ணக்கோளின் அடைவிற்குப் பேச்சு அவசியமில்லை. ஆயினும் முறைசார் நிலையிலே காட்டதக்க உதாரணங்கள் இல்லாத போது எண்ணக்கோளைப் பிறர்க்கு உணர்த்தவும், அடையாளமுறையில் அல்லது குறியீட்டு முறையில் விளக்கவும் யாதாயினும் ஒருவழி அவசியம் வேண்டும்.

எண்ணக்கோளின் விரிவாக்கமும் பயன்பாடும் :–

பகுப்பு நிலையிலும் முறைசார் நிலையிலும் கற்கப்படும் எண்ணக்கோள்கள், (i) அவற்றின் பொதுப்பண்புள்ள புதிய உதாரணங்களைக் கூறல் (ii) அவற்றின் உள்நிலை, மேல்நிலைத் தொடர்புகளை அறிந்துதுகொள்ளல் (iii) காரண காரியத்தொடர்புகள், பிறதொடர்புகளை அறிதல் (iv) பிரச்சினைகளைத் தீர்த்தல் என்னும் நான்கு செயல்களிலும் பயன்படுகின்றன.

பொதுப்பண்புள்ள புதிய உதாரணங்களைக் கூறலும், உதாரணமானவை உதாரணமல்லாதவைகளைப் பிரித்தறிதலும் என்னும் திறன்கள் மூலம் ஒருவர் மிகையாய்க் கற்றல், புதிதாய்க் கற்றல், என்பவற்றின் தேவையைக் குறைத்தல் இயலும். சிறியது தொடக்கம் பெரியதுவரை ஒழுங்குபடுத்தப் பட்ட உதாரணங்களை ஒருவர் அவற்றின் பிரிவுகளில் அடக்கும்போது இணைநிலை, உள்நிலை, மேல்நிலைத் தொடர்புகள்பற்றிய அறிவு வெளிப்படுகின்றது. இவ்வறிவு வயது செல்ல செல்லப் பெருகுகின்றது. மேலும் ஒருவரின் எண்ணக்கோளின் தகுதியையும், பயன்படுதிறனையும் அது மேம்படுத்துகின்றது. காரண காரியத்தொடர்பு, இணைப்புத்தொடர்பு, நிகழ்தகவு (PROBABILITY) என்னும் ஏனைய தொடர்புகள் பற்றியஅறிவு பொருள்களின் இனங்களைக் காண உதவுகின்றது. இறுதியாக, எண்ணக்கோள்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படும்போது அவை கோட்பாடுகளாகவே பயன்படுத்தப் படுகின்றன.

பயன் மிகுகற்றல் :-

இத்தகைய எண்ணக்கோள்களைக் கற்றல் பயனுள்ளதாய் அமையவேண்டுமாயின் அதன் அமைப்பு, செயல்கள், கற்கும் நிலைமை என்னும் மூன்று மாறிகளும் (VARIABLES) துணைபுரிவனவாய் விளங்க வேண்டும். இசைவான சூழ்நிலையில் பொருத்தமான செயல்கள்மூலம் எண்ணக்கோள்களைக்கற்கும் ஒருவர் முற்கூறிய நான்கு நிலைகளில் ஒவ்வொன்றிலும்செய்யவேண்டிய அறிவுச்செயல்களை நிறைவேற்றும் ஆற்றலும், அச்செயல்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் நுண்ணிய வேறுபாடுகளுடன் நிறைவேற்றும் சாதுரியமும், சொல்லாற்றலும், சொல்விளக்கத்திறனும் பெற்றிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பாடசாலைப் பிள்ளைகள் பாதுகாப்பாகப்

பாடசாலைக்குச் சென்றுவர

நீங்கள் நாடவேண்டிய

நம்பிக்கையான ஸ்தாபனம்

# யூட்ஸ்கூல் சேவிஸ்

கோப்பாய்.

# JUDES SCHOOL SERVICE

KOPAY.

இணை நிறுவனம்:

## யூட்ஸ் வேர்க்ஸ் சொப்

கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பி, தேநீர், சண்யோ பீடா
குளிர்பான வகைகளுக்கும்
சிற்றுண்டிகள், பம்பேஸ்வீற்ஸ்
பற்றிஸ், கட்லெஸ் கேக்
பிஸ்கற் வகைகளுக்கும்
சிறந்த இடம்

**சண்யோ கோப்பி & கூல்பார்**

எமது தயாரிப்புகளை
மங்கள வைபவங்களுக்கும் மற்றும் பண்டிகைகளுக்கும்
முன் கூட்டியே ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்

**SUNYOAH COFFEE & COOLBAR**

16B, நவீன சந்தை
சுன்னாகம்

---

யாழ் நகரில்

- சகல விதமான பாடசாலை உபகரணங்கள்
- சஞ்சிகைகள்
- பத்திரிகைகள்

மற்றும் வெளியீடுகள் அனைத்துக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

பெரியகடை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# DAINI COOL & COFFEE BAR

IRUPALAI JUNCTION

KOPAY.

யாழ் / கொழும்பு / யாழ் சொகுசான பிரயாணத்துக்கும்

கோப்பாய் யாழ் பாடசாலை சேவைகட்கும்

# சிற்றிசன்ஸ் சுப்பர் ட்ரவல்ஸ்

30ஸ்ரீ5603　　29ஸ்ரீ7877

விபரங்கட்கு:

து. பாஸ்கரன்
கௌரி வாசம்
கோப்பாய்.

மு: விக்னேஸ்வரன்
5ம் கட்டையடி
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான பிடவைவகைகளுக்கும்

மாளிகை சாமான்களுக்கும்

விஜயம் செய்யுங்கள்

**மல்ரி டீலேர்ஸ்**

இருபாலைச் சந்தி, கோப்பாய்.

நவ நாகரீக டிசைன்களிலான

தங்க ஆபரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

**அனிதா ஜுவல்லர்ஸ்**

48, ஆடிய பாத வீதி, நல்லூர் மாக்கற், கல்வியங்காடு.

**For Modern & Distinctive Jewellary**

**ANNITHA JEWELLERS**

48. Adiyapatha Road,
Nallur Market,
KALVIYANKADU


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்திய பரிசில் பெற்ற எழுத்தாளர் முல்லைமணி

பாவலர் வளர்த்த பைந்தமிழ் மொழியை
நாவலன் தீவில் நற்றமிழ்ச் செல்வர்
பற்பலர் காலப் பாங்கினுக் கேற்ப
சிற்சில மாற்றம் செய்து செந்தமிழின்
மரபினைச் சிதையாது இலக்கணம் பிறழாது
வரன் முறை உணர்ந்து வகைவகையாக
இலக்கியம் படைக்கிருர். இவர் தம் வரிசையில்
புலத் துறை முற்றிய ஆசான் முல்லை
மணியெனும் சுப்பிரமணியன் ஒருவர்
பணியெனக் கருதி இலக்கியம் படைக்கும்
முல்லை சமூக நிலையினை உணர்ந்து
நல்ல சிறுகதை நாவல் கட்டுரை
நாடகம் மரபுக் கவிதை படைக்கும்
நாடறி எழுத்தர் பரிசில் பற்பல
பெற்றவரெனினும் பெருமை பேசார்
உற்றவர் ஊரார் உறவெனப்பாராது
எவர்க்கும் இனிவராய் எந்தப் போதினும்
உவப்புடன் உதவும் உத்தம குணத்தராய்
பேரும் புகழும் பிறங்கிட வாழ்கிருர்
யாருமே பெருமையாய் பேசும் ''சாகித்ய
மண்டலம் இவரை மாட்சிமைப் படுத்து
வண்ணம் இம்முறை இவரின் சிறுகதை
தொகுதியாம் அரசிகள் அழுவதில்லையைத்
தகுதி பரிசிலுக் கெனவே தேர்ந்து
அளித்தது பரிசிலை அதனை எண்ணி
புளகம் உறுநாம் அவர்தம் இலக்கியப்
பணியினைப் போற்றி மேலும் அவரின்
பணிகள் தொடர்ந்திட வாழ்த்துகின்ருேம்.

ஞான. திருக்கேதீஸ்வரன்
தமிழ் II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் குயிற்பாட்டில் ஓர் கண்ணோட்டம்

என். பாலகிருஸ்ணன்
(சமூகக் கல்வி 2-ம் வருடம்)

சித்தரிக்க முடியாத சிறும் அலைகளி டையே கொந்தளிக்கும் சமுத்திரம் போன்று பாரதி ஓர் புதுவெள்ளம் தமிழ் இலக்கியம் என்னும் ஆற்றுப் பாதையில் சமீப காலத் தில் வந்த புதிய பெருவெள்ளம். அவ் வெள்ளம் வருவதற்கு முன்பு சங்க இலக்கி யங்களும், சமய இலக்கியங்களும் வள்ளுவர் இளங்கோ, கம்பர், முதலான மிகப் பெரு வெள்ளங்கள். அதே ஆற்றுப் பாதையில் நீண்டு பாய்ந்து, சென்றிருக்கின்றன. பாரதி என்னும் புரட்சிப் புதுவெள்ளம் பழைய ஆற்றுப்பாதையில் பாய்ந்து சென்றதாயி னும் அது புதுப்புனல் கொண்டது.

பாரதியை முதலில் புரட்சிக் கவிஞராக தான் தமிழகம் கண்டது அநீதியை எரிக்க துடிக்கும் ஆவேச உணர்ச்சியையும் சுதந்தி ரப் பற்றுடன் கூடிய தீயின் தன்மைகொண்ட தாகப் பாரதியின் தேசியப் பாடல்கள் முதலில் தமிழகத்தை கவர்ந்தன. உடனடி யாக சமுதாயத்திலுள்ள அழுக்கை எரிக்கத் துடிக்கும் பிரச்சாரத் தீயாக அவருடைய தேசிய கீதங்கள் அமைந்தன. அவ்வளவில் நின்றுவிடாமல் பாரதி எல்லையற்ற இயற்கை அழகையும் உணர்ச்சியையும் மெய்ஞானத் தையும் உணர்த்தும் கவிதைகளாக அமைந் தவைகளில் குயிற்பாட்டும் ஒன்றாகும்.

வளம் மிக்க புதுவை என்னும் திருநக ருக்கு மேற்கேயுள்ள மாஞ்சோலையின் பேடைக் குயிலொன்று வான்கிளையொன் றில் பெட்புற அமர்ந்து பாடிக்கொண் டிருக்கும். இன்னிசை தீம் பாடலை கேட் கின்றான். கவிஞர் குயிலின் பாட்டு அவன் உள்ளத்திலே கவிதை வெறியை மூண்டெ ழச் செய்கின்றது. குயில் பாட்டுக்கதையின் நிகழ்ச்சிக்கு அமைந்த சூழ்நிலை பாரதியின் உள்ளக் கருத்தையும் அனுபவத்தையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

''காலையிளம் பரிதி வீசுங்கதிர்களிலே
நீலக்கடலோர் நெருப்பெதிரே சேர்மணி போல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறை தவறு
வேகத் திரைகளினால் வேதம் பொருள் பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென் புதுவை''

என்று தொடங்குகின்ற முதல் வர்ணனையி லேயே பாரதி நம் காட்சியனுபவத்தை தெளிவு படுத்தி விடுகின்றார். காலைப் பொழுதின் அழகு வருணனையோடு இக் குயிற்பாட்டு தொடங்குகின்றது. மண், நீர், காற்று, மலர், பறவைகள் உயிர்க் குலங்கள் ஆகிய அனைந்து உலகப் பொருள் களும் ஒளியின் வரவைப் போற்றி இன்புற் றிருக்கும், நேரம் காலைப் பொழுதாகும். கவிஞனின் கற்பனையில் கதிரவனின் வரவு கண்டு புல்லும் நகைக்கிறது. எல்லையற்ற அவன் பேரழகையும் வண்ணக் கதிர்களின் கோலங்களையும் கண்டு வாய்பிளந்து வியந்து மலர்ந்து நிற்கின்றது. மண்ணில் விரவியி ருந்த இருள் பிரிந்து பொருள்களில் ஒளி தெளிவை பிறப்பிக்கின்றது. இருளில் அமைதி யாக உறங்கிக் கிடந்த நீரும் கதிரவன் ஒளியைக் கண்டு மகிழ்ந்து துள்ளிப் பாடிச் செல்கின்றது.

'புல்லை நகையுறுத்திப் பூவை வியப் பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதி

இவ்வருணனையின் ஒவ்வொரு சிறு பகுதியும் குயில் பாட்டின் உட்பொருளை தெளிவு படுத்திக் காட்டுகின்றது. அறிந்தோ அறி யாமலோ பாரதியை ஆட்கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி அனுபவத்தின் பெருக்கு தானாகவே கதையின் வருணனைகளிலும் சொற்களிலும் ததும்பி வெளிப்படுகின்றது. அடுத்த வர்ணனையில் நீலக்கடலோர் தெருப்பெதிரே சேர்மணிபோல் மோகனமாஞ்சோதி பொருந்தி என்பது நீலக் கடலும் செஞ்ஞாயிறும் ஒன்றோடொன்று பொருந்துகின்ற காட்சியை பாரதி வர்ணிக்கின்றார். அழகே யுருவாய் அமைந்த சோதியும் நீலக்கடலும் இணைகின்றன. காலைப்பொழுது என்று கூறுவதன் வாயிலாக இன்பச் சூழலைக் குறிப்பிட்டுக் காட்டிய பாரதி கடலும் கதிரும் ஒன்றோடொன்று பொருந்துவதாகிய காட்சியைக் கூறுவதன் வாயிலாக அழகும் இசைமையும் நிறைந்த ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றார்.

''முறை தவறு
வேகத் திரைகளினால் வேதப் பொருள் பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரை''

என்பது கடலின் அலைக்கரங்கள் புதுமையின் வளஞ்சார் கரையை வந்து தழுவுகின்றன. எனவே காதலின் பந்தில் திளைக்கும் விருப்பமும் துடிப்புகள் கொண்ட கடல் தன் காதலியாகிய மண்மகளை அலைக் கரங்களால் தழுவ விரைகின்றது. இந்த வர்ணனையில் பாரதி காதல் அனுபவத்தை சித்தரித்துக் காட்டி இசையையும் அன்பு நிறைந்த ஒரு சூழ்நிலையை உணர்த்துகின்றார். அலைகள் முறை தவறாது மீண்டும் மீண்டும் இணைப்பை நாடி கரையை வந்து தழுவுகின்றன. என்பதையே பாரதி தன் உள்ள உணர்வோட்டமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இக் குயிற் பாட்டில் வருகின்ற குயிலி என்னும் பெண் அழகும் இளமையும் பொருந்தியவள் முந்துமழகினில் மூன்று தமிழ் நாட்டிலும் யாரும் தனக்கு இணையில்லையாகுமாறு சிறப்புற்றிருந்த அவள் தன் மாமன் மகனாக மாடனுக்கு மாலையிடுவதாக வாக்களிக்கின்றாள்.

''மையலினால் இல்லை : அவன்
சால வருந்தல் சகிக்காமல் சொல்லி
விட்டாள்

பின் வற்புறுத்தலினின்று மீள முடியாமல் அவ் வற்புறுத்தலுக்கு கட்டுப்பட்டு திருமணம் என்னும் பிணைப்பினால் குரங்கனுக்கு கட்டுப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகின்றது. நெட்டைக் குரங்கனுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டதனால் இனங்கொண்ட மாடனை நோக்கி

''கடுமையில்

''நெட்டைக் குரங்கனுக்கு பெண்டாக
நேர்ந்தாலும் நாயனாக நின்றனையே பெற்றிடுவேன்'' என்று சின்னக் குயிலி செப்புவதும் காதலினால் அன்று அன்பால் கொண்ட கருணையினாலேயே இறுதியாகச் சேர மன்னனைக் கண்டவுடன் அவன் மீது கொண்ட உண்மையான காதலினால் அவனோடு கலக்கின்றாள் இதில் உண்மைக் காதலின் சக்தியினை தேனில் விழும் வண்டினைப் போலவும் விந்தையுறு காந்தமிசை விழும் இரும்பினைப் போலவும் என சிறப்பான உவமைகள் மூலமாக பாரதி விளங்கியுள்ளமை பாராட்டப்படக் கூடியதாகும்.

குயிலின் காதல் இடையில் துண்டிக்கப்பட்டுவிடுகின்றது. அவன் மீண்டும் அவ் விருவருக்கு வசமாகின்றான், மறு பிறப்புக் கதையிலும் இதே கருத்தை பாரதி தொடர்ந்து அமைந்திருப்பதைக் காணலாம். வேடன் ஒருவனின் மகளாய் தோன்றிய சின்னக் குயிலியைக் குரங்கனும் மாடனும் மீண்டும் தொடர்ந்து பேய்களாக சுற்றி வருகின்றார்கள். பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் மானிடத்தின் இப் போராட்டத்தின் இறுதியில் அன்பு உணர்வு வென்று கவிஞனுடன் இணைந்து விடுகின்றது.

''காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

என்று குயிலின் ஓசை இதயத்தில் அடித்தளத்திலிருந்து ஒலிக்கின்றது ஓர் உயிர் மற்றோர் உயிருடன் அன்பினால் இரண்டறக் கலத்தலாகிய அனுபவமே காதல் அனுபவம் ஆண் பெண் என்றும் இருவேறு பால்களின் இணைப்பாயினும் அவற்றுக்கு அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமே அடிப்படையாகின்றது. பேரின்ப நிலைக்கு அடிப்படையான காதலை வேண்டிக் கரைகின்ற குயில் அது இன்றேல் காதலை வேண்டித் தவிக்கின்றது. இதனையே பாரதி

''காதலை வேண்டிக் கரைகின்றேன். இல்லை எனில் சாதலை வேண்டித் தவிக்கின்றேன் என்று குயில்பாடுகின்றமையக்கருத்தே பாடலில் பல இடங்களிலும் மீண்டும் மீண்டும் வருகிறது. இப்பல்லவி கொண்டமைந்த குயிற் பாட்டில் மற்ற அடிகள் அப்பல்லவியின் மையக் கருத்தை விளக்குகின்ற சரணங்களாகின்றன. ஒளி, ஒலி, குணங்கள், அனுபவங்கள் முதலான வேறு சில படைப்புத் தோற்றங்களையும் இயக்கங்களையும் கொண்டு மேற்கூறிய தத்துவத்தை குயிலின் பாட்டின் விளக்குகின்றார். பாரதி ஒலிகளின் முறை தவறாத இணைப்பில் நாதம் பிறக்கின்றது ஒலிகளின் வேறுபாட்டிலே சேதம் விளைகிறது. அது போல அன்பென்னும் அடிப்படைத் தத்துவமாகிய நாதத்திலே பிணைந்த ஒலித் துணுக்குகளாகிய உயிர்கள் நாதத்தில் பிறக்கின்ற பேரின்பத்தை துய்க்கின்றன' இவ்வாறு அன்புத் தத்துவத்தை பாடுகின்ற குயிலை வடிவமாகவே கண்டு அரியாசனம் ஏற்றி பாடி மகிழ்கின்ற பாரதியின் தீஞ்சுவையாம் தேன்பாகாம் குயிற்பாட்டு தமிழ் இலக்கியம் என்ற மகுடத்தின் தனி வைரமாக மிளிர்கின்றது.

ஃ ஃ ஃ

*With the Best Compliments*

**"SIYANAS"**

*EXPERT TAILORS*

*No. 176, New Market,*

*Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பண்ணிசை

திருமதி மங்களேஸ்வரி குலசிங்கம்
(சங்கீதம் 1-ம் வருடம்)

சங்க காலத்திலே நிலவிய வெறியாட்டு, குரவை, துணங்கைக் கூத்துக்களில் உணர்ச்சி, ஆட்டம் இரண்டுடனும் ஓசை வெளிப்பாடாக இருந்தது. சங்கப்பாடல் களில் 'பண்' என்றசொல் பண்ணப்படுவது எனப்பொருள் உணர்த்தியது. வெறியாட்டு முதலியவற்றில் ஓசையெழுப்பப் பயன்பட்ட 'பறை' பண்ணமைமுரசு ஆகியது புறநானூறு, பதிற்றுப்பற்று, பத்துப்பாட்டு அகநானூறு ஆகிய பாடற்றெருகுதிகளில் பண்ணும் அதற்கு அனுசரணையாக யாழ், குழல், பேரியாழ், சிறியாழ், தண்ணுமை பெருவங்கிலம், முழவு ஆகிய வாத்தியங்களும் இருந்துள்ளன எனவும் தகவல்கள் உள காலை மருதப்பண்மாலை செவ்வழிப்பண் என்ற வகையில் பொழுதுக்கும் பண்ணுக்குமிடையில் பொருத்தங் கண்டிருந்தனர். பண்பாடிப் பரிசு பெறுவோர் பாணன் பாண் மகன், பாடினி, விறலி என அழைக்கப்பட்டுள்ளனர். சிலப்பதிகாரத்தில் பாணர் என்ற கலைஞர் குழுவினரிடம் நாடக மகளிர் இசைபயின்ற சான்றுகள் உள.

> ''முன்னுளிலே பாணன் கையிலும் பாடினி கையிலும் இருந்த யாழ்க்கருவியானது இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச்சேர்ந்து விட்டது''

என்று யாழ்க் கருவிபற்றி கூறுமிடத்து விபுலானந்தர் குறிப்பிட்டுள்ளார். சங்கப் பாடலில் சப்தஸ்வரங்கட்கு குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம் என்ற பெயர் வழங்கப்பட்டிருந்ததை குறிப்பிடற்பாலது. காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தின் கண்ணே ''துத்தங் கைக்கிளை விளரிதாரம் உழைஇனி ஓசை பண்கெழுமப்பாடிச் சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதம் துந்துபீ தாளம் வீணை மத்தளங் கரடிகை வன்கை மென்றேல் தமருகங் குடமுழா மொந்தைவாசித் தத்தனை விரவினேடாடும் எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே'' என்று காணக் கூடியதாயுள்ளது.

இசைத் தமிழ் இலக்கண நூலாகிய பஞ்ச மரபு 'பண்' என்பதற்கு தரும் விளக்கம் இதுவாகும். தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் ஆகிய எட்டு இடங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, வருட்டு, தாக்கு ஆகிய எண்வகை முயற்சியாலும் பண்ணப்படுவதே பண்ணிசையாகும் என்கின்றது.

பண்ணிசை என்றவுடன் முதலில் நமக்கு நினைவில் வருபவை மூவர் தேவாரப் பதிகங்கள். கி.பி. 6ம்,7ம், 8ம்நூற்றுண்டுகளில் பண்ணமைதியோடு பாடப்பட்ட இப்பதிகங்கள் கி. பி. 11-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் திருமுறைகளாக வகுக்கப்பட்ட போது திருஎருக்கத்தம்புதியூரைச் சேர்ந்த யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினி இவற்றுக்குப் பண் அமைத்துக் கொடுத்தாள் என்பது திருமுறை கண்ட புராணம் தரும் தகவலாகும்.

பக்தியுணர்வைப் பரப்புவதற்குரிய ஒரு பயன் கலையாகத் தமிழ்ப்பண்ணிசைத் திருப்பம் ஏற்பட்டது நாயன்மார்கள் காலத்திலேயே யாகும். 'பண்ணென்ற' இசை பாடுவதில் வல்லவர்கள் நால்வருமேயாவர். நாயன்மார்களுடன் யாழ்ப்பாணர் முதலிய இசைக் கருவி வல்லாளர்கள் இணைந்து சென்று பக்திப் பாடல்கட்கு பண்ணமைத்தனர். இவர்களது பதிகங்களில் பாலையாழ், செந்து மருதம், முல்லையாழ், செவ்வழி, பஞ்சமம், காந்தாரம், பஞ்சுரம், மருள். குறிஞ்சி, கொல்லி, காமரம், நேரிசை, நந்திசை, பிறழ் என்ற பண் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கி. பி. 10 ம் நூற்றுண்டில் 103 பண்கள் பற்றிய தகவல் பிங்கல நிகண்டில் உள்ளது. இது பஞ்ச மரபு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பமைவு, அடிப்படையில் பண்,பண்ணி யல், திறம், திறத்திறம் என வகைப் படுத்தப் பட்டுள்ளது.

பல்லவர் காலத்து பத்தி வெள்ளமாக ஊற்றெடுத்துப் பெருகிய பண் சோழர் காலத்தில் திருமுறைகளாக தொகுப்பிக்கப் பட்டன. இராஜ ராஜ சோழன் நம்பியாண் டார் நம்பியின் உதவியுடன் பண்களைத் தொகுப்பித்தான். திருஞான சம்பந்த சுவா மிகளின் திருமுறைப் பண்களிலே 'ஏழே யேழு நாலே மூன்றியலிசையியல்பா எனவும் பண்பொலி செந்தமிழ் மாலை எனவும் சிறப் பித்துள்ளார். சுந்தரர் ''நாளுமின்னிசை யால் நற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' என்று அவர் புகழ் போற்றியுள்ளார்.

சோழர் காலத்தின் பின் கி. பி. 11ம் நூற்றாண்டில் தோன்றிய இசை நுணுக்கம் பஞ்ச மரபு, சிற்றிசை, பேரிசை, இந்திர காளீயம், பஞ்ச பாரதீயம் போன்ற நூல்கள் தமிழ் இசை இலக்கணம் பற்றிக் கூறுகின்றன. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்லாமிய படை எடுப் பும் அதனைத் தொடர்ந்து விஜயநகர ஆதிக் கமும் தமிழரின் பாரம்பரிய கலை மரபுகள் யாவற்றிலும் நிலையான தாக்கத்தை விளை வித்தன. இந்த தாக்கங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனது பாரம் பரியத்தினைத் திரும்பிப் பார்க்கும் நிலை 20ம் நூற்றாண்டில்தான் சாத்திய மாகியது.

தமிழ் பண்ணிசையைப் பேண வேண் டும் என்ற ஊக்கம் தமிழகத்திலும், ஈழத் தமிழகத்திலும் இந்த நூற்றாண்டிலேயே ஆரம்பித்தது. ஆலயங்களில் மட்டும் அன்றி இசையரங்குகளிலும் பண்ணிசை தனியிடத் தைப் பெறத் தொடங்கியுள்ளது.

இனி 'பண்' பற்றியும் அவற்றிற்கு கர் நாடக இசையில் வழங்கப்படும் இராகங் களின் பெயர்களைப் பற்றியும் நோக்கு வோம்.

**பண்களும் - கர்நாடக இராகங்களும்**

| | | |
|---|---|---|
| 1. | புறநீர்மை | — பூபாளம் |
| 2. | காந்தாரம் | — நவரோஜ் |
| 3. | பியந்தைக்காந்தாரம் | — நவரோஜ் |
| 4. | கௌசிகம் | — பைரவி |
| 5. | இந்தளம் | — நாத நாமக் கிரியை |
| 6. | தக்கேசி | — காம்போதி |
| 7. | சாதாரி | — பந்துவராளி |
| 8. | நட்டபாடை | — நாட்டை |
| 9. | பழம் பஞ்சுரம் | — சங்கராபரணம் |
| 10. | காந்தார பஞ்சமம் | — கேதாரகௌளை |
| 11. | பஞ்சமம் | — ஆஹிரி |
| 12. | நட்டராகம் | — பந்துவராளி |
| 13. | தக்க ராகம் | — காம்போதி |
| 14. | பழந்தக்கராகம் | — ஆரபி |
| 15. | ஸ்ரீ காமரம் | — நாத நாமக் கிரியை |
| 16. | கொல்லி | — நவரோஜ் |
| 17. | கொல்லிக் கௌவீணம் | — நவரோஜ் |
| 18. | வியாழக் குறிஞ்சி | — சௌராஷ்டிரம் |
| 19. | மேக ராகக்குறிஞ்சி | — நீலாம்பரி |
| 20. | குறிஞ்சி | — அரிகாம்போதி |
| 21. | அந்தாளிக் குறிஞ்சி | — சாமா |
| 22. | செவ்வழி | — யதுகுலகாம் போதி |
| 2 . | செந்துருத்தி | — மத்தியமாவதி |
| 24. | யாழ்முரி | — அடாணு |

இந்தப் பண்கள் பகல் பண், இராப் பண், பொதுப்பண் என வகுக்கப்பட்டு அவைக்கு இசைக் கிரமமும் வகுக்கப்பட் டுள்ளமை குறிப்பிடற்பாலது. உயிரிலே படிந்துள்ள தூசுகளை நாள்தோறும் கழுவித் தூய்மை செய்வது பண்ணுன இசையே என்று அறிஞர் பேட் ஹோல்ட் அவர்பாச் கூறியுள்ளதில் ஐயமே இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி ஒரு கண்ணோட்டம்

**த. இராசலிங்கம்**
**சமூகக் கல்வி (1–ம் வருடம்)**

பொருளாதார ஆய்வில் வளர்ச்சி, அபிவிருத்தி என்பன இரு வேறுபட்ட சொற்பதங்களாகவும் இரு வேறுபட்ட கருத்துக்களை உடையனவாகவும் காணப் படுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தினை குறுகிய கருத்தில் ஆராய் கின்ற முறை பொருளாதார வளர்ச்சியா கும். ஒரு நாட்டின் பொருளாதார முன் னேற்றத்தினை பரந்த நோக்கில் அணுகி ஆராயும் முறைபொருளாதார அபிவிருத் தியாகும். தேசிய வருமானக் கணிப்பீட் டில் நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட தலாவீத வருமானம் தொடர்ச்சியாக அதி கரித்துச் செல்லுமாயின் அதனை நாம் பொருளாதார வளர்ச்சி எனலாம். எனவே பொருளாதார வளர்ச்சியை அறிய உத வும் அளவுகோல் நிலையான விலைகளில் கணிக்கப்படும் தலாவீத வருமானமேயா கும். இதில் இருந்து அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில் பொருளாதார வளர்ச்சி என்பது வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பை மட்டுமே பிரதிபலிக்கிறது என்பதாகும். ஆனால் பொருளாதார அபி விருத்தி என்னும் போது தேசிய வருமான அதிகரிப்பு மட்டுமன்றி பொருளாதார சமூக நலன்களில் ஏற்படும் முன்னேற்றத் தையும் உள்ளடக்கியதாக அமைகிறது. அதாவது தலாவீத வருமானத்துடன் வேலை வாய்ப்பில் ஏற்படும் மாற்றம், வருமானப் பங்கீட்டில் ஏற்படும் மாற்றம் வறுமை மட்டத்தில் ஏற்படும் மாற்றம் கல்வியில் ஏற்படும் மாற்றம் போன்ற பல்வேறு சமூக ரீதியான மாற்றங்கள் ஏற்படுவதனுல் அதனை நாம் பொருளாதார அபிவிருத்தி எனக் கூறலாம்.

அபிவிருத்திபற்றி பொருளியல் அறி ஞர்கள் பலர் பல்வேறு வரைவிலக்கணங் களைக் கொடுத்திருக்கின்றனர். அவை ஒவ் வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைத் தருகின்றன. 1965ம் ஆண்டு கின்டில் பேர்ச் என்பவர் அபிவிருத் திக்கு விளக்கம் கூறும்போது ''ஒரு பொரு ளாதாரத்தில் அதிகப்படியான வெளியீடும் தொழில்நுட்ப மாற்றமும் நிறுவரீதியான ஒழுங்குப்பாடுகளும் ஏற்பட்டால் அதனையே அபிவிருத்தி என்று குறிப்பிடுகிறார்'' 1966ம் ஆண்டு பிறின்னர் என்பவர் ''அபி விருத்தி என்பது உணர்வு ரீதியாகத் தூண் டும் வளர்ச்சியினைக் குறிக்கும் என்றார்'' 1970ம் ஆண்டு அடல்மன்னும், மியரும் அபிவிருத்தி பற்றிக் கூறும்போது ''மெய்த் தலாவீத வருமானம் நீண்ட காலத்துக்கு உறுதியானதாக அதிகரிக்குமாய் இருந் தால் அதனை அபிவிருத்தி'' எனக் கூறலாம். என்றனர் 1972ம் ஆண்டு சியர்ஸ் என்பவர் அபிவிருத்தி பற்றிக் கூறும் போது முன்பு கூறியவர்களில் இருந்து முற்றாக வேறுபட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றார். இவரின் கருத்துப்படி வறுமை மட்டக்குறைப்பினை யும் வருமான சமமின்மையை நீக்குவது டன் உயர்ந்த வேலைவாய்ப்பினை வழங்கு கின்ற பொருளாதார நிலை அபிவிருத்தி'' எனக் கூறுகிறார். 1974 ம் ஆண்டு மைடால் என்பவர் அபிவிருத்தி பற்றிக் கூறும் போது ஒரு முழுச் சமூக அமைப்பி னது ஒரு மேல் நோக்கிய அசைவே அபி விருத்தி'' எனக் கூறுகிறார். இங்கு சமூக அமைப்பு என்பது பொருளாதார ரீதியற்ற காரணிகளது வளர்ச்சி யினைக் கூறுகிறார். மேற்கூறிய வரைவிலக் கணங்கள் ஒவ்வொன்றிலும் முழுமையான விளக்கங்கள் இன்மையால் பின்வந்த பொருளியலாளர்கள் கின்டில் பேர்க், சியர்ஸ் மைடால். ஆகியோருடைய விளங்கங்களை ஒன்றாக இணைத்து அபிவிருத்தி என்பதற்கு பின்வருமாறு விளக்கம் கொடுக்கிறார்கள்'' சமூக அமைப்பினது தொடர்ச்சியான வளர்ச்சியும் உறுதியான தேசிய வருமான வளர்ச்சியும் சமூகத்தில் பெரும்பாலானோர் மத்தியில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை யும் ஒப்பீட்டு ரீதியில் வறுமை மட்டக் குறைப்பினையும் உடைய பொருளாதார நிலையை அபிவிருத்தி என்று கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியை கணிப்பிடுவதற்கு இன்று ஏராளமான வாதங்கள் இன்று வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் இரு நிலைப்பாட்டுக்குள் உள்ளடக்கி நோக்கலாம். ஒன்று மரபு ரீதியான குழுவினர். இவர்கள் தேசிய வருமானத்தின் அடிப்படையில் அபிவிருத்தியினை அளவிடலாம் என்கின்றனர். இரண்டாவது வகுப்பினர் தேசிய வருமானத்துடன் சமூக நலன் குறிகாட்டிகளும் சேர்க்கப்பட்டுக் கணிக்கப்படவேண்டும் என்று கூறுகின்றனர். முதலாவது குழுவினர்களில் கின்டிர்பேக், அடல்மண், மியர் போன்றோர் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுமாயின் அப்பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்த பொருளாதாரம் என்று கூறுகின்றனர். இவர்கள் தலாவீத வருமானம் 500 டொலருக்கு மேலாக ஒரு நாட்டில் இருக்குமாயின் அந்நாடு அபிவிருத்தி அடைந்த நாடு என்றும், 500 டொலருக்கு குறைவாக இருக்குமாயின் அதனை அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்றும் கூறினார்கள். இவர்கள் மெய்த்தலாவீத வருமானம் அதிகரிக்குமாயின் சேமிப்பு அதிகரிக்கும். இச் சேமிப்பில் ஏற்படும் அதிகரிப்பு முதலீட்டை அதிகரிக்கச் செய்யும், முதலீடு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் உற்பத்தி மீண்டும் மெய்த்தலாவீத வருமானத்தை உயர்த்தும் இத்தலாவீத வருமான உயர்வு அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். எனவே தவாவீத வருமானம் உயர்வாக உள்ள நாடுகளை அபிவிருந்தி அடைந்த நாடுகள் என்று கூறுகின்றனர்.

முதலாவது குழுவினர் கூறிய கருத்தை மைடால்சியர்ஸ் போன்ற இரண்டாவது குழுவினர் முற்றாக எதிர்த்தனர். இவர்கள் தலாவீத வருமானத்தை மட்டும் அபிவிருத்தியை அளக்க பயன்படுத்துவது தவறானது. தலாவீத வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை அந் நாட்டின் மொத்த சனத் தொகையினால் வகுக்க வருவதாகும். இத் தலாவீத வருமானம் ஓர் எண் கணித சராசரியே இது சனத் தொகை மாற்றம், பணவீக்கம், விலை உயர்வு போன்ற காரணிகளினால் மாற்றம் அடையக் கூடியது. எனவே தலாவீத வருமானக் குறிகாட்டியை மட்டும் பயன்படுத்துவது சிறந்த முறை அல்ல. தேசிய வருமானத்தைக் கணிப்பிடும் போது சட்டத்துக்குஉட்பட்ட உற்பத்தியையேகாட்டும் ஆனால் நடைமுறை உற்பத்தியைக் காட்ட மாட்டாது. அத்தோடு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளில் சந்தைப் படுத்தப்பட்ட பொருட்கள் சேவைகளையே காட்டும். ஆனால் வளர்முக நாடுகளில் உற்பத்தியில் பெரும் பகுதி உற்பத்தியாளர்களாலேயே நுகரப்படுகிறது. இது கணிப்பீட்டில் இடம்பெறுவதில்லை. தேசிய வருமானம் பொருட்கள் சேவைகளின் அளவைக் காட்டுமேயன்றி பொருட்களின் தரத்தைக் காட்டமாட்டாது தலாவீத வருமானம் ஒரு நாட்டின் உண்மையான வருமானப் பங்கீட்டைக் காட்டமாட்டாது அது மட்டுமன்றி கல்விமுன்னேற்றம், சுகாதார மருத்துவ வசதிகளில் உண்டான முன்னேற்றம் வறுமை குறைவடைதல் போன்ற விடயங்களை இது காட்ட மாட்டாது. தலாவீத வருமானம் ஆண்டொன்றுக்கு 500 டொலருக்கு மேலாக இருந்தால் அபிவிருத்தி அடைந்த நாடு எனக் கூறுதல் தவறானதாகும். குவைத்தின் தலாவீத வருமானம் ஏறத்தாழ 15.000 டொலரையும் ஐக்கிய அரபுக் குடியரசு 30;000 டொலரையும் உடையது. ஆனால் இந்நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகும், கல்விவசதி மருத்துவ வசதி, வருமானப் பங்கீடு, வறுமை மட்டக் குறைப்பு போன்ற சமூக நலன்களில் இந்நாடுகள் அடிமட்டத்திலேயே இருக்கின்றன. ஆனால் இலங்கையின் தலாவீத வருமானம் 250 டொலராகும். ஆனால் வாழ்க்கைப் பௌதீகச் சுட்டெண் 82 ஆக இருக்கிறது. எனவே மேற்கூறிய அரபு நாட்டுடன் ஒப்பிடும் போது தலாவீத வருமானத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் கல்வி வசதி, மருத்துவ வசதி உயர்ந்த வாழ்க்கைத் தரம் வறுமை மட்டக் குறைப்பு போன்றவற்றில் முன்னேற்றம் கண்டிருப்பதை பௌதிக வாழ்க்கைச் சுட்டி காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தலாவீத வருமானத்தை மட்டும் அபிவிருத்திக்கான அளவுகோலாக கையாளுதல் தவறானது என வாதிக்கின்றனர்.

அபிவிருத்தி அளவிடுவதற்கு தலாவீத வருமானத்துடன் சமூக நலன் குறிகாட்டிகளையும்பயன்படுத்தவேண்டும்எனமைடால் சியர்ஸ் போன்ற இரண்டாவது குழுவினர் வலியுறுத்துகின்றனர். அபிவிருத்திக்கு இவர்கள் வரைவிலக்கணம் அளிக்கும் போது ''வறுமை மட்டக் குறைப்பினையும் வருமானம் சம பங்கீட்டு இன்மையை நீக்குவதுடன் உயர்ந்த வேலைவாய்ப்பினை வழங்குகின்ற நிலையையே அபிவிருத்தி'' என்று கூறுகின்றனர். இவ்வரைவிலக்கணத்தில் மூன்று விடயங்கள் இடம்பெறகின்றன. அபிவிருத்தி அடைந்த பொருளாதாரமாக இருக்க வேண்டுமாயின் ஒப்பீட்டு ரீதியில் வறுமை மட்டம் குறைக்கப்படுவதுடன் நாட்டின்வருமானப்பங்கீடுசமமாக இருப்பதுடன் அப்பொருளாதாரத்தில் உயர்ந்த வேலை வாய்ப்பு இன்மை இருக்கக் கூடாது. இந்த அடிப்படையிலேயே அபிவிருத்திக்கு விளக்கம் கொடுக்கின்றனர். இவர்கள் 18 குறிகாட்டிகளை கவனத்தில் கொள்கின்றனர். அவற்றுட் சில பின்வருமாறு:- சுகாதார வசதி, கல்வி வசதி, வீட்டுவசதி, வருமானப்பங்கீட்டு குறிகாட்டி, விவசாயக்குறிகாட்டி, போசாக்கு, வேலை வாய்ப்பு, சிசு மரணம், போக்குவரத்து போன்ற குறிகாட்டிகளை பயன் படுத்துகிறார்கள்.

இன்றைய பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைவதற்கு தனியே தலாவீத வருமானத்தை அளவு கோலாகக் கொள்ளாமல் தலாவருமானத்துடன் சமூக நலன் குறிகாட்டிகளையும் பயன்படுத்தியே அபிவிருத்தியினை அளவிடவேண்டும். சமூக நலன் குறிகாட்டிகளை கணிப்பிடுவது என்பது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அவ்வாறு கணிப்பீடும் போதும்வழுக்களே பெருமளவு இடம் பெறுகின்றன. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சமூக நலன் குறிகாட்டிகளை கணிப்பிடுதல் என்பது பெரும்சிக்கலாக காணப்படுகிறது. காலப் போக்கில் இக்குறிகாட்டிகள் திருத்தமாக கணிக்கப்படுமாக இருந்தால் இச் சமூகநலன் குறிகாட்டிகள் அபிவிருத்தியினை அளவிடுவதற்கு ஒரு சிறந்த குறிகாட்டியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

★

எல்லாவிதமான

பலசரக்கு வகைகளையும்

★ மொத்தமாகவும்

★ சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

**லக்சுமி ட்ரேடர்ஸ்**

இருபாலைச் சந்தி,

கோப்பாய்.

F



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்துவிடு சமுதாயம் சீரழிந்தால்

திருமதி ச. றகுமத்துல்லா
(தமிழ்நெறி 1)

நான் பிறந்தேன் நல்லதொரு சமுதாயத்தில்
நான் வளர்ந்தேன் நல்லதொரு தாயின் மடியில்;
நான் பெற்ற குர்ஆனும் நபிகள் வாழ்வும்;
நீடித்து வாழுமென நம்புகின்றேன்!
நான் வாழும் உலகத்தின் போக்கைக் கண்டு
நாளை என்கதியென்ன ஏங்குகின்றேன்
நாம் பெற்ற திட்டங்கள் நல்லவைதாம்!
நமக்காக வழி சொல்லும் மக்கள் எங்கே?

வாள் எடுக்கும் திறனுண்டு என் கரத்தில்,
வழி சொல்லக் காட்டத்தான் மக்கள் தேவை!
தோள் கொடுத்துத் தாங்குவேன் தயங்கமாட்டேன்
தட்டியெனை ஊக்கத்தான் யாருமில்லை!
வாழ்வளிப்பேன் சமுதாயம் வளம் பெற்றோங்க;
வருகவென அழைக்கும் மாந்தரெங்கே?
செல்வத்தில் மிதக்கும் பேரான சீமான்கள்
மனமிரங்காத நெஞ்சத்தை யாரிடம் சொல்வேன்

மாடிகளைக் கட்டித்தான் கண்ட பலனென்ன?
மாளிகையாய் உள்ளங்கள் மாறவேண்டும்.
கோடிகளாய் பள்ளிகளைக் கட்டுகின்றீர்;
கைகட்டி இறையைத் தொழ ஆட்களில்லை
கூடுகிறீர் கூட்டங்கள் முடிவு இன்றி
குவலயத்தில் நீர் இன்று ஏது செய்தீர்?
பாடுவதில் பயனென்ன பழம் புகழ்கள்?
பாரினில் ஏது வெற்றி இன்று கண்டீர்?

சொல்லாதீர் முன்னோரின் பெருமை மட்டும்
செயலற்ற சொற்களிலே சலித்து விட்டேன்
நல்லதொரு வழிசொல்லி எனை அழைத்தால்
தோள் கொடுப்பேன் சமுதாயம் சிறந்துஓங்க
கல்லுடனும் என் நெஞ்சம் மோதும் உண்மை
கனவிலும் எவருக்கும் அஞ்சமாட்டேன்
அல்லாஹ்வுக்கெனை என்றும் அர்ப்பணிப்பேன்
அயராது உழைக்கவும் நான் தயங்கமாட்டேன்

எத்தனை தொழில் நிலையம் கட்டி விட்டோம்
ஏழைகளின் வாழ்வுக்கு ஏது செய்தோம்?
கத்துவதில் ஏது பலன்? 'கலை' என்று நாம்
கலைதானும் சரியாக வளர்ந்ததாமோ?
உத்தமனே! எம்மிறைவா இந்தமக்கள்
உணர்வு பெற வழி தந்தும் உறங்குதல் ஏன்?
செத்து விடு சமுதாயம் சீரழிந்தால்
சாவின்றி வாழ்வேது சொல்லு தோழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலையும் கைத்தொழிலும்"

எம். ஏ. நிஸாப்
(சித்திரம் 1-ம் வருடம்)

பூர்வீக இலங்கையில் தொழில்கள் யாவும் குடிசைகளிலேதான் செய்யப்பட்டு வந்தன. கிராமங்களில் இன்றும் அந் நிலைமை மாறாதிருப்பதைக் காண்கிறோம். தொழில்கள் குலவித்தையாக கையாளப் பட்டுவந்தன. கைத்தொழிற் கல்வி பரம்பரைக் கல்வியாகவே இருந்தது. மகன் தந்தையிடம் இருந்தே கல்வியைப் பெற்று வந்தான். சிற்ப சாத்திரங்களில் கூறப்பட்ட முறைப் படி கைவினைஞர்கள் தனது வாழ்க்கையை நடாத்தி வந்தபோது அந்நூல்களில் கூறப் பட்ட பிரமாணங்களுக்கு அமையவே கலைப் பொருட்களை அமைத்து வந்தனர். இடைக் காலத்தில் வாழ்ந்த கைவினைஞர்கள் அறிவில் மிக்கோராயும், புதிய முறைகளைக் கையாளவல்லோராயும் இருந்ததுடன் சமயக் கணக்கரோடு சமநிலை உடையோராகவும் விளங்கினார்கள் என ஓர் அறிஞர் கூறுகின்றார். டாக்டர் ஆனந்த குமாரசாமி அவர்கள் பண்டைய கைத்தொழில் முறையை பின்வருமாறு விளக்குகிறார்.

''உண்மையான கைத் தொழில் தலத்தில் கைவினை மாணவன் பயிற்றப்படுவதோடு வளர்க்கவும் படுகிறான். இவன் இங்கு தன் தந்தையின் சீடனாகின்றான். இவன் இந்த நிலைமைகளை இழக்க நேரிடின் உலகில் உள்ள எந்தத் தொழிற் கல்வியும் ஈடு செய்ய முடியாது''

வேலைத்தலத்தில் ஆரம்பம் முதல் தொழில் முறை உண்மைப் பொருட்களோடும், உண்மை நிகழ்ச்சிகளோடும் தொடர்புள்ளதாக பணி செய்வதன்மூலமும் கற்கப்படுகின்றது. அங்கு கற்பிக்கப் படுவது தொழில் முறை மட்டுமன்று. வேலைத்தலத்தில் வாழ்க்கையே உளது. அது மாணவனுக்கு உளப்பண்பாட்டோடு வாழ்க்கையின் அடிப்படைத்தத்துவத்தோடு அறிவையும் அளிக்கின்றது. கலைக்கு தொழில் முறையைக் காட்டிலும் இவையே இன்றியமையாதன. இக்காலத்தில் காணப்படும் முதலாளி, தொழிலாளி எனும் பாகுபாடு அக்காலத்தில் இருக்கவில்லை. எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஒரு பொதுத் தொழிற்சாலையில் வேலை செய்யும் வழக்கமும் அக்காலத்தி லில்லை. ஒவ்வொரு குடிசையும் ஒவ்வொரு தொழிற்சாலையாகவும், குடும்பத்தலைவன் முதலாளியாகவும், அவன் மனைவி, மக்கள், உறவினர் தொழிலாளியாகவும் விளங்கினர். நாட்டில் உள்ள மக்கள் எல்லோரும் ஒரே விதமான தொழிலையே விரும்பிச் செய்யும் வழக்கமும் அக்காலத்திலில்லை. குறிக்கப் பட்ட மக்கள், குறிக்கப்பட்ட தொழிலைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்தனர். அவ்வொழுங்கின் பயனாய் மக்களிடையே வேலை இல்லாத நிலை ஏற்படா திருந்தது. ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ்வதற்கு வேண்டிய சொந்தத் தொழில் ஒன்றே இருந்து வந்தது. அக்காலத்தில் ஒரு கூட்டத்தினரின் தொழில் வேறொரு கூட்டத்தினர் செய்ய முயற்சிக்கவில்லை. அவ்விதம் செய்ய முயற்சிப்போர் ''குலத் துரோகிகள்'' எனக் கருதப்பட்டனர்.

''தன் தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்'' எனும் பழமொழி இதன் காரணம் பற்றியே எழுந்தது போலும். ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் குலவித்தையை நன்கு போற்றி வளர்த்து கௌரவத்துடன் வாழ்ந்தனர். கம்மாலர் வகுப்பைச் சேர்ந்த கைவினைஞர்களுக்கு சிறந்த இடம் சமூகத்தில் அளிக்கப் பட்டிருந்தது. கோவில் களையும். அரண்மனைகளையும் அமைக்கும் காலங்களில் ஈடுபடும் கைவினைஞர்கள் தக்க கௌரவத்துடன் நடாத்தப்பட்டு வந்தனர். அந்நிலையங்களோடு தொடர்புடைய எல்லாக்கிரிகைகளிலும் இவர்கள் முதலிடம் பெற்றனர். இவ்விவரங்களை எல்லாம் பௌத்த நூல்களிலும், தமிழ் நூல்களிலும், காணலாம்.

இக்காலத்தில் வழக்கிலிருக்கும் ''சம்பள முறை'' அக்காலத்தில். இருக்கவில்லை. (பண்டமாற்று முறையே அக்கால சம்பள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாகும்.) கிராம மக்கள் தாம் பெறும் பொருட்களுக்கு தானியங்களையும், புடைவைகளையும், பிற பொருட்களையும் சம்பளமாக கொடுத்து வந்தனர். இதைவிட இல்லங்களில் சமய சம்பந்தமான, சமூக சம்பந்தமான கிரியைகள் நடைபெறும் வேளைகளில் அந்நிகழ்ச்சிக்கு வேண்டப்படும் கைவினைஞர்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்பட்டன. இத்தகைய ஒழுங்குமுறை ஒரு கிராம மக்களை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் போல நடந்து கொள்ள துணை புரிந்ததுமன்றி அவர்களிடையே அன்பையும், ஒற்றுமையையும் வளர்த்து வந்தது. இந்தியாவிலும், இலங்கையிலும் இன்று காணப்படும் பழைய பெரும் ஆலயங்களையும். தாதுகோபங்களையும் கட்டுவித்தவர்கள் அரசர்களேயாவர். பெரும் திருப்பணிகளை அரசர்கள் செய்யத் தொடங்கும் காலங்களில் அவ்வேலைக்கு வேண்டிய திறமை படைத்த கைவினைஞர்களை நாடெங்கும் ஆராய்ந்து தேடி எடுத்து அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் வேண்டிய பல வசதிகளை அமைத்துக் கொடுத்து திருப்பணியைத் தொடங்குவார்கள். அக்கைவினைஞர்களுக்கு ஒரு குறித்த கிராமத்தின் வருவாயை மானியமாக அளிப்பதும் பழக்கமாக இருந்தது. கைவினைஞர்களின் தலைவனாக விளங்கும் ஆசாரிக்கு முழுக் கிராமத்தையும் சொந்தமாக சன்மானம் பண்ணிய நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன.

பொருட்கள் கலை நூல்களில் கூறப்பட்ட அளவுப் பிரமாணத்திற்கு இணங்கவே அமைக்கப்பட்டுள்ளன. பரிமாணம் தவறின அமங்கலப் பொருட்களாக விலக்கப்பட்டுள்ளன. விகாரவடிவுடையபொருட்களையும் உடைந்தனவற்றையும் உபயோகிக்க மக்கள் விரும்பியதில்லை. அக்காரணத்தினால் உபயோகத்தில் இருந்த பொருட்கள் யாவும் அளவுப் பரிமாணம் உடையனவாயும், கலைவனப்பு பொருந்தியதாகவும் இருந்தன. அக்காலத்து மக்கள் தினசரி வாழ்க்கையில் உபயோகித்த பொருட்கள் இக்காலத்து நகரங்களில் உள்ள ''சித்திரசாலைகளில்'' (ART GALLARIES) அலங்காரப் பொருட்களாக காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். இதிலிருந்து அக்கால கைவினைஞர்களது வேலைத் திறனையும், கலைப் பண்பையும் நாம் நன்கு அனுமானித்துக் கொள்ளலாம்.

அக்காலத்தில் எப்பொருளும் காட்சிப் பொருளாக செய்யப்பட்டதன்று. எல்லாப் பொருட்களும் அரசர்கள், செல்வர்கள், பொது மக்கள் ஆகியோரது உபயோகத்திற்காகவே பெரும்பாலும் செய்யப்பட்டன. தாது கோபங்களும், சிவாலயங்களும், கடவுள் வழிபாட்டுச் சாதனமாகவும், தெய்வ அர்ப்பணமாகவும் அமைக்கப் பட்டன. ஒவ்வொரு பொருளிலும் உபயோகத் தன்மையும், அழகும் ஒன்று பட்டு விளங்கின. கலைவினைஞர்கள் ஒழுக்கமான வாழ்க்கையாலும், சிற்ப நூல் புலமையாலும், சமயப் பற்றினாலும் பண்படுத்தப்பட்ட தமது உள்ளங்களில் தாம் எழுதிக் கண்ட அழகு பொருந்திய உருவங்களையே பொருட்களில் அமைத்து மகிழ்ந்தனர். அக்கால கைவினைஞர்கள் தாம் அமைக்கும் வடிவங்களுடன் தம்மை ஒன்று படுத்தி நின்றே அவற்றை திறம்பட அமைத்தனர் என்பது கலைக்கண் கொண்டு அப்பொருளை உற்று நோக்குவோரின் கண்களுக்கு நன்கு புலனாகும் என்பது வெளிப்படை.

ஃ

ஃ

உயிர் வாழ்கின்ற ஒவ்வொருவனும், தான் உயிரோடு இருப்பதை உணர்த்துவதற்கு எதையாவது செய்தல் வேண்டும். தான் வாழ்வதைப் பிறருக்கு உணர்த்தத் துடிக்கிறான் ஒவ்வொருவனும். எனது பிரசன்னத்தைப் பிறருக்கும் ஊருக்கும் உலகத்துக்கும் உணர்த்த எழுத்து பயன்படும் என நான் துணிந்தேன். எழுதலானேன்.

— வல்லிக்கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுதான் இந்நிலை மாறுமோ?

**திரு. க. பூலோகசிங்கம்**
**ஆரம்பக்கல்வி I**

ஆதிகாலம் முதல் இன்றுவரை மக்கள் எந்த விடயத்தையும் ஆரம்பிக்கும்போது நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து ஆரம்பிப்பதற்குத்தான் புனிதமான இடத்தைக் கொடுக்கின்றார்கள். ஆயினும் நாட் செல்ல ஆரம்பத்திற்கான மதிப்பு அலட்சியம் படுத்தப்படுவதை அவதானிக்கலாம். 'அரிவரி வாத்தியார்' என அலட்சியமாக அழைக்கப்படும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் நிலை பற்றி சிறிது சிந்திப்போம்.

இன்று நாம் வானளாவும் கட்டிடங்களைக் காணுகிறோம். அவற்றின் அலங்காரம், கவனிப்பு, மதிப்பு முழுவதும் அதன் மேற்பகுதிக்கே தவிர அந்தக் கட்டிடம் தலை நிமிர்ந்து உறுதியாகவும் கம்பீரமாகவும் நிற்பதற்கு ஆதாரமான அத்திவாரத்தை யாருமே நினைப்பதுமில்லை மதிப்பதுமில்லை.

இன்று பெரும் பெரும் ஜம்போஜெட் கொங்கோட் முதலிய பாரிய விமானங்கள் பறக்கின்றன. ஆயினும் அவை பறக்க முக்கியமானது அவை ஏறி இறங்குவதற்குரிய விமானத்தள ஓடு பாதைகளே விண்ணை நோக்கி ரொக்கற்றுகளும். விண்வெளிக் கப்பல்களும், ஏவுகணைகளும் செல்கின்றன. ஆயினும் இதிலும் முக்கியமானது அவை ஏவப்படும் ஏவுகணைத் தளங்களே.

தாவரங்கள் விருட்சங்கள் வானளாவ வளர்ந்து வனப்பு மிகு காட்சியை அளித்தாலும் அவற்றின் வளர்ச்சிக்கு ஆதாரமானது அது வளரும் நிலத்தின் வளமும் வேருமாகும்.

குழந்தை பிறக்கின்றது அது ஆரம்பத்தில் வளரும் சூழலுக்கும் அடிப்படைப் பராமரிப்புகளுக்கும் ஏற்பவே அதன் பிற்காலம் அமைகின்றது.

விஞ்ஞானிகளும், மேதைகளும் உருவாகின்றார்கள். ஆனல் அவர்கள் உருவாவதற்குரிய அடிப்படைக் கல்வியை வழங்கியவர்களும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே.

கட்டிடத்திற்குரிய மதிப்பு அத்திபாரத்திற்கில்லாதது போலவும் விமானங்களுக்கும் ரொக்கற்றுகளுக்கும் இருக்கும் மதிப்புதளங்களுக்கு இல்லாதது போலவும், தாவரங்களுக்கு இருக்கும் மதிப்பு நிலத்திற்கில்லாதது போலவும்குழந்தை வளர்ந்து பெரியவனானதும் அவனைவளர்த்துபெரியவனாக்கியபெற்றோரை மதியாமல் இடையில் வந்த பெண்ணை மதிப்பது போலவும் விஞ்ஞானிகளும், மேதைகளும் உருவாவதற்குரிய அடித்தளத்தை அமைத்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் சமூகத்தில் மதிப்பு இல்லை. மரியாதை இல்லை. இதன் காரணமாகவே ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தாங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்று சொல்ல வெட்கப்படும் நிலைக்கு ஆளாக்கப் படுகின்றார்கள் இந்நிலை இலங்கை போன்ற நாடுகளிலேயே நிலவுகின்றது. மேற்கு நாடுகளில் இந்நிலை இல்லை. இங்கிலாந்து இளவரசர் சாள்சின் மனைவி டயனா கூட ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியையே என்னும் போது ஆரம்பக் கல்வி ஆசிரியருக்கு அந்நாடுகளில் இருக்கும் மதிப்புப் புலனாகும்.

பாடசாலைக்கு பல்வேறு சூழலிலிருந்து மாணவர்கள் வருகின்றார்கள். அவர்களின் தனியார் வேறுபாடுகளுக்கமைய அவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை வளர்த்து ஆளுமையை விருத்தி செய்து அன்பு, கோபம், பயம் என்னும் மெய்ப்பாடுகளை மடை மாற்றம் செய்து புனிதப்படுத்தி சமுதாயத்திற்குரியவனாக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குபவர்கள் என்று கல்விமான்களாலும், எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்று ஆன்றோராலும் மதிக்கப்படும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு என்றுதான் இந்தச் சமுதாயம் உரிய இடத்தை வழங்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே கேளடா!

மா. மாசிலாமணி
(சமூகக்கல்வி II)

மானமே பிரதானமென்று உணரடா — தன்
மானம்நீங்கி வாழ்வது அவமானமடா
வானமே இடிந்திங்கு வீழ்ந்திடினும் — உன்
வீரநெஞ்சை நிமிர்த்தியே நில்லடா

கொடுப்பதெங்கள் கொள்கையென்று கூறடா — எவரையும்
கெடுப்பதெங்கள் கொள்கையல்ல உணரடா
கொடுமைகண்ட போதினிலே எதிர்த்துநில்லடா — நல்ல
கொள்கைவழி சென்றிடவே புறப்படடா.

சீதனம்வாங்கி மணஞ்செய்வது மடமையடா — அது
சீர்கெட்ட முறையென்று பறைசாற்றடா
காதகரைக் கண்டுநீயும் காறித்துப்படா — கொண்ட
கொள்கைக்காக உயிர்விடுவது தியாகமடா.

ஒற்றுமையாய்வாழ்வதால் நன்மைபல உண்டடா — இதை
உணர்ந்து கொண்டால் உயர்வுனக்கும் உண்டடா
கற்றவழிநின்று செயலாற்றி வாழடா — உன்
கடமைகண்டு தரணியென்றும் தலைவணங்குமே

ஆசைகளை நெஞ்சினிலே வளர்த்துவிடாதே — அவை
அழிவுகளைத் தேடித்தரும் மறந்துவிடாதே
வேசம் போடும் மானிடரை நம்பிவிடாதே — பெரும்
வேதனைகள் அவர்கொடுப்பார் மறந்துவிடாதே.

புத்தன் காந்தி யேசுபாதை மறந்துவிடாதே — நீயும்
போதைதரும் பாதைநாடிச் சென்றுவிடாதே
சத்தியம் தருமமென்றும் தோற்றுவிடாதே — இங்கு
சாதி மத பேதமகற்ற தயங்கிவிடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்திட்டம் அமைப்பதில் மாணவர் செல்வாக்கு

இ. துரைராஜா BSc., Dip. Ed., M. A.

கல்விக்கு பலவகையான வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. நடத்தைவாதிகள் அதைநடத்தை மாற்றம் என்கின்றனர். அவர்கள் கூற்றின்படி கற்பித்தல் என்பது புதிய நடத்தைக் கோலத்தை நோக்கி இட்டுச் செல்லல் ஆகும். 'டுயீ' போன்றவர் கற்றலை ''எதிர்கால அனுபவங்களை மாற்று முகமாகவும் அனுபவங்களின் உட்பொருளை அறியு முகமாகவும் சமகால அனுபவங்களை ஏற்படுத்துவதே கல்வி'' என்கின்றனர். ஸ்கின்னர், ''குறிப்பிட்ட இலக்கை நோக்கி மாணவரை இட்டுச் செல்வதற்கானபுறக்கட்டுப்பாட்டுக்கோலங்களை அளிப்பதே கல்வி'' என்றார் இது டுயீன் கொள்கைக்கு அதாவது மாணவன் தன்னிச்சையாக இயங்கும் சமூகப் பொறுப்புள்ள ஒரு உயிரி என்பதற்கு, முரணாக அமைகிறது. டுயீனது கருத்து மண்டல சார்புக்கற்றல் கொள்கைகளை ஆதரித்து நிற்கிறது. அது ஜனநாயக தனிமனித உரிமைக் கோட்பாடுகளுக்குள் அமைந்துள்ளது ஸ்கின்னர் போன்ற நடத்தை வாதிகள் விலங்குகளுக்கும் மனிதருக்கும் அறிவுசார் தோற்றப் பாடுகளில் ஒற்றுமைகள் பல உள்ளன என்பர் ஆனால் டுயீயோ விலங்குகளின் அறிவுசார் நடத்தைகள் சிக்கலான முன் பதிவுகளின் விளைவுகள் எனவும் குழந்தைகளின் நடத்தைகள் அப்படியல்ல எனவும் கூறுகிறார். இறுதி நிலையையும் உள்ளத்தில் நிலை நிறுத்தியே அதற்கேற்ப குழந்தை கற்கிறான் என்பது டுயீன் வாதம்.

இது மாத்திரமன்று மேற் கூறிய இரு முனை நிலைகளுக்கு இடைப்பட்டதாக 'புறூனர்'போன்றோர் சில கற்றல் கொள்கைகளை முன்வைத்துள்ளனர். ''கற்கக் கற்றலே'' முக்கியம் எனவும் ''ஆய்வு செய்தல்; 'கண்டு பிடித்தல்'' போன்றவையே பிரதானம் என வும் 'புறூனர்' கூறுவர். ஆகவே கலைத் திட்டம் மாணவனை ஒரு அறிஞன் என்ற நிலையில் வைத்தே அமைக்கப்பட வேண்டும் என அவர் கூறுகிறார். இதற்கு மாறாக ''பியாஜேயும்' அவரைச் சார்ந்தோரும், வயது முதிர்ந்தோரும், குழந்தைகளும் முற்றிலும் வேறுபட்டவர் எனவும், ஆகவே குழந்தையை முதிர்ந்தவராகக் கணித்து கலைத்திட்டத்தை அமைத்தல் தவறு எனவும் வாதிடுவர்.

உளவியல், கல்வியலின் விஞ்ஞானக்கூறு எனக் கருதப்படும். ஆனால் இதை அடிப்படையாகக் கொண்டு கலைத் திட்டம் அமைக்க முயலும்போது பல சிக்கல்கள் ஏற்படலாம். உதாரணமாக கற்பித்தல் முறைகள் போன்றவற்றில் உளவியலை கருதுதல் அவசியம் என்றாலும் கலைத் திட்டத்தின் உள்ளடக்கத்தை நிர்ணயிக்கும் போது பிரச்சினைகள் பல எழுகின்றன. கல்வி என்பது ஒரு வரையறுக்கப்பட்ட அறிவுக் கொத்தை அறிந்து கொள்வது என்றும், அதை எப்படி புகட்டுவது என்பதே கல்வியாளரின் கடமை எனவும் கருதல் தவறாகும். அடிப்படைத் தத்துவங்களை கைவிட்டு கற்பித்தல் முறைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கலாகாது. விவேகம், அகக்காட்சி உருவாதல் போன்றவற்றை கருத்தில் கொள்ளாது கலைத்திட்டம் அமைக்க முடியாது. ஆகவே கலைத்திட்டம் அமைப்பதிலும் கூட கற்பித்தலைப் போலவே மாணவ மைய முறைகைக் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

இவ்வாறு குழந்தைகளின் தன்மைபற்றியும், அவர்கள் கற்கும் முறை பற்றியும் அதற்கேற்ப உருவாக்கப்படும் கலைத் திட்டத்தின் அமைப்பு பற்றியும் பல்வேறு கருத்துக்கள் இருப்பது தெரிகிறது.

இக் கொள்கைகள் யாவற்றையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஒரு கலைத்திட்டம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்க முடிகிறது. இதில் கற்பித்தல் முறை சார்ந்த கருத்துக்களையும் மாணவ நிலைக்கு ஏற்ப மாற்ற வேண்டும். உதாரணமாக, கல்வி முறையியலின் பிதாவெனக் கருதப்படும் கொமெனியஸ்புலனங்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை தெளிவாகவும் சுருக்க மாகவும் கூறியுள்ளார், புலன்களிற் கூடாக செல்லாத எதுவும் அறிவாக அமையாது என்பது அவர் கருத்து. அதாவது ஐம்புலன் களின் உபயோகம் கற்றலுக்கு மிக முக்கி யம். கட்புல, செவிப்புல துணைச் சாதனங் களின் முக்கியத்துவம் இதிலிருந்து தெரி கிறது,

கலைத்திட்டம் எனும் பதத்திற்கு பல வித விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றிலும் சில பொது அம்சங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஒன்றிணைத்து 'றிச்மண்ட்' பின் வருமாறு கூறுகிறார், ''கலைத்திட்டம் என்பது சாதாரண வாழ்க்கையில் பெற முடியாத அனுபவங்களை திட்டமிட்டு நெறி படுத்தி மாணவன் பெற்றுக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு' ஆகவே கலைத்திட்டமானது மாணவனின் அறிவு நிலைக்கு ஏற்ப மாத்திரமன்றி அதன் தேவைக்கேற்பவும் அமைந்திருக்க வேண் டும். வயது மாத்திரமன்றி சமகால, அர சியல், பண்பாடு, போன்ற வேறு பல காரணிகளும் தேவைகளை மாற்றக் கூடியன்.

எனவே கலைத்திட்டம் அமைக்கும் போது கவனிக்க வேண்டிய சில நிபந்த னைகள் தெளிவாகின்றன. முதலாவதாக மாணவ வளர்ச்சிப் பருவத்திற்கேற்ப கலைத் திட்டம் அமைய வேண்டும். அவன் புறத் தேவைகளையும் கலைத்திட்டம் அமைப்போர் கருத்திற் கொள்ள வேண்டும், அடுத்து, கல்வியின் பிரதான நோக்கங்களையும் கலைத் திட்டம் புறக்கணிக்கலாகாது இவ்வாறாக அமைக்கப்பட்ட கலைத்திட்டம் ஒரு நியமத் திட்டமாக அமையுமெனவும் எண்ண முடி யாது. மாணவன் என்றும் மாறிக் கொண்டேயிருப்பதால் கலைத்திட்டமும் நெகிழ்வுள்ளதாகவே இருத்தல் வெண் டும். எனவே கலைத்திட்டம் அமைப்போர் இயன்றவரை பொருத்தமான ஒரு கலைத் திட்டத்தை அமைக்க முடியுமேயன்றி நிய மக்கலைத்திட்டமொன்றை மாணவர் மேல் திணித்தல் சரியன்று கலைத்திட்ட அமைப்பு நிச்சயமாகப் பரவலாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

